திருவள்ளுவர் ஆண்டு 2042

சனவரி - 2011

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 3

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



## 62வது குடியரசு தினவிழா

செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திருமிகு. இரா. குருசாமி அவர்கள்
கொடி ஏற்றி வைக்கிறார். உடன் மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர்
திருமிகு. இரா. அழகுமலை அவர்கள் மற்றும்
ஆட்சிக்குழு உறுப்பினர் திருமிகு. க. முத்தையா பசும்பொன்,
ஒருங்கிணைப்பாளர், முதல்வர் (பொ) பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 3 திருவள்ளுவர் ஆண்டு 2042

ஜனவரி 2011




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் தொடர் | *முனைவர் கா. அரங்கசாமி* | 4 |
| சிறுபஞ்சமூலத்தில் உயிரியல் வழி அறநெறிகள் | *முனைவர் சி. சொர்ணமாலா* | 8 |
| மூவகை மனித நேயம் | *ஆறுவிரல் ஐம்பொறி* | 15 |
| அருளம்பலவனாரின் திருவாசக ஆராய்ச்சி உரையில் சொற்பொருள் விளக்கம் | *கோ. கௌதமன்* | 20 |
| நற்றிணை நாராயணசாமி ஐயர் | *சி. ஆறுமுகம்* | 24 |
| வன்முறை | *சா. இளையராஜா* | 27 |
| பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் போர்த்திறம் | *ஜெ. உமா* | 30 |
| தமிழ் அலங்காரச் சதகம் | *கவிஞர் மழைமகன்* | 34 |
| இலக்கியம் தரும் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகள் | *முனைவர் ரா. விசயராகவன்* | 35 |

# இதழ் மணம்

**அன்புடையீர்,**

**செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.**

இம்மாத இதழில் புதுவரவாக நமக்குக் கிடைத்திருக்கும் கோபி கல்வெட்டியலின் அறிஞர் முனைவர் அ. அரங்கசாமி அவர்களின் "திருக்குறளின் தோற்றக் களம்" என்னும் கட்டுரைத் தொடர் செந்தமிழ் வாசகர்களுக்கு அளப்பரிய ஆனந்தத்தைத் தரும் என நம்புகிறோம்.

முனைவர் சி. சொர்ணமாலா அவர்களின் சிறுபஞ்சமூலத்தில் "உயிரியல் வழி அறநெறிகள்" சமணநெறிச் சிந்தனை சிதறல்களாகத் தரப்பட்டிருக்கும் பாங்கு பாராட்டிற்குரியது.

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா" என்ற

மணிமேகலை கருத்துக்களோடு சிறுபஞ்சமூலக் கருத்துக்களை ஒப்பு நோக்கி இருப்பது மகிழ்ச்சி தருகிறது.

தொடர்ந்து செந்தமிழ் இதழில் இடம்பெறும் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள், மனிதநேயத்தை மூன்று வகையாகப் பிரித்து வகைப்படுத்திக் காட்டும் நயம் இனிமையானது.

ஈழத்து உரையாசிரியர் பண்டிதமணி சு. அருளம்பலவானர் அவர்களின் "திருவாசக ஆராய்ச்சியுரை" இம்மாத இதழில் இடம்பெற்று திருவாசகத்தேனை தித்திக்கத் தருகிறது.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயரைப் பற்றியும் அன்னாரின் படைப்புகள் பற்றியும் அறிய வைக்கிறார் சிதம்பரம் சி. ஆறுமுகம் அவர்கள்.

கவிஞர் ஞானக்கூத்தன் கவிதைகளில் இருந்து வன்முறைகளால் நாடு எவ்வாறு சீரழிவிற்கு உள்ளாகிறது என்பதை சா. இளையராஜா அவர்களின் ஆய்வுரை தெளிவுபடுத்துகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் போர்த்திறத்தை ஜெ. உமா அவர்கள் பறைசாற்றுகிறார்.

நிறைவாக தொல்லியல் வரலாற்றுச் சான்றுகளை முனைவர் ரா. விஜயராகவன் அவர்களின் கருத்துக்களோடு வாசகர் வாசகங்களையும் தந்திருக்கிறோம்; இனி வரும் இதழ்களில் வாசகர்களோடு சுவாசிக்க விரும்புகிறோம்.

**முனைவர் க. சின்னப்பா**

இனி நீங்களும் இதழும்....

# திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள்

தொடர்

சித்தாந்த நன்மணி
திருமுறைத் தென்றல்
கல்வெட்டியல் அறிஞர்
முதுபெரும் புலவர்
தமிழ்மாமணி

*முனைவர் கா. அரங்கசாமி*

கோபி

## முன்னுரை

திருக்குறள் உலகளாவிய மெய்யியல் அறவியல் ஆய்வுச் சுரங்கம். எண்ணும் திறன் மிகமிக அதன் மெய்ப்பொருள் உணர்வர். தொல்காப்பியம் தமிழரின் வாழ்வியல், இலக்கிய இலக்கணம். திருக்குறள் உலகளாவிய அறவியல் மெய்யியல் இலக்கணம். ஆனால் தமிழர்களில் பலர் இன்று வரை இதனை உணர்ந்திலர். தமிழ் கற்றவர்களாகக் கருதப்படுவோரும் முற்ற உணர்ந்திலர். திருக்குறளுக்காக உழைத்த அறிஞர்கள் அறவோர்கள், சான்றோர்கள் பலர். இன்னும் உழைத்து வருகின்ற அறிஞர்கள் பலரும் உளர். தமிழ்மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமது வாழ்வின் வான்பயன் குறள் நெறி பரப்புதல் என்பார். அவர்தான் ஒவ்வொரு குறட்பாவின் தோற்றக்களம் அறிதல் வேண்டும் என்பார். தமிழப் போராளியாகித்தம் வாழ்வினை ஈந்த முனைவர் சி.இ.இலக்குவனார் அவர்கள் 'குறள் நெறி' கண்டவர். அதற்காகவே தம்மை ஈகம் செய்தவர். அவ்விருவரின் நனவும் கனவும் தமிழ் மக்கள்- உலக மக்கள் குறள்நெறி நின்றிட வேண்டும் என்பதேயாம். அதற்கான அடித்தளம் குறளின் தோற்றக்களம் காணல். திருவள்ளுவர் ஒவ்வொரு குறளையும் ஏன் படைத்தார்? என்ன நோக்கில் படைத்தார்? என்பதை அறிந்தபின்னரே திருக்குறளை உணர முடியும். இந்த நெறி முறைகளைக் காணும் முயற்சியே இத்தொடராகும்.

## உரைகாண உணர வேண்டிய அடித்தளங்கள்

சொல்லும் பொருளும் காலந்தோறும் மாறுவன. மனிதன் தான் நினைப்பதை முற்ற முடியச் சொல்லவியலாக் குறையுடையவன். அதன் விளைவே தொன்மை என்னும் புராணப் பொய்மைத்தோற்றம் பெற்றது. தமிழகத்தை ஆண்ட அறிவர் நெறி சங்க இலக்கியத்தால் அறியப்படும். அறிவர் என்னும் சித்தர் நெறி பகுத்தறிவுப் பார்வையும் இயற்கை இன்ப ஆட்சியும், மனமாட்சியும் கொண்டது. நீடுவாழும் சாகாக்கலை அறிவர் நெறியின் அடித்தளம். திருமந்திரம் கூறும் ஓகு நெறியும் அறிவர் நெறியே. எனவே ஓகு நெறி நின்று திருக்குறள் உரையினைக் காணல் வேண்டும். திருக்குறளுக்கு உரை காணப் பல்வேறு நெறி முறைகள் இருப்பினும் அடித்தளமாக அமைவன கீழ்வருனவாகும்.

1. குறளாசான் தரும் சொற்பொருள் விளக்கம் அறிதல்.
2. குறளின் மையக் கருத்தாகிய கோட்பாட்டினை உணர்தல்.
3. திருக்குறளின் அறவியல் அடித்தளம் காணல்.
4. குறள் மெய்யியல் அடித்தளம் அறிதல்.
5. குறளின் அறவியல் சார்ந்த மெய்யியல் அறிதல்.
6. அயல் நெறி மறுப்புக் கருத்துக்களைத் தெரிதல்.
7. ஒட்டு மொத்தப் பொதுப்பார்வை வேண்டும் - துண்டுப் பார்வை கூடாது.
8. காலக் கோட்பட்ட சொற்பொருள் தேர்தல்.
9. குறளுக்கு ஒத்த காலத்துச் சான்றோர்தம் கருத்துருக்கள்.
10. திருக்குறள் சொற்பொருள் அகரமுதலி தொகுத்தல்.
11. தனித் தமிழர் கண்ட அறிவர் நெறி அறிதல்.
12. தமிழவரின் பண்பு நெறி முறை உணர்தல்.
13. காலங்கடந்து நிற்கும் சொற்பொருள் உணர்தல்.
14. தனித்தமிழர் கண்ட மெய்யியல் உணர்தல்.
15. முதல் நான்கு அதிகார உட்பொருள் அறிதல்.

16. குறளின் முப்பால் நோக்கு (குறளாசான் உள்ளம்) தேர்தல்.

17. குறளின் தமிழிய உலகியல் பார்வை.

18. குறளின் முன்னோர் மொழி, தம்மொழி அகச் சான்றால் அறிதல்.

திருக்குறளின் மையக் கருத்தினை அறிவதற்குக் கீழ்கண்ட கோட்பாடுகளையும் நாம் அறிதல் நலம்.

அவையாவன,

1. திருக்குறள் காட்டும் கடவுள் (தெய்வம்) கோட்பாடு.
2. இம்மை மறுமை இன்ப துன்பக் கோட்பாடு.
3. *ஆளுமை மிக்க அறவியல் கோட்பாடு.*
4. வளந்தரும் வாழ்வியல் கோட்பாடு.
5. தகுதிமிக்க சமூக நீதிக் கோட்பாடு.
6. தனித்தமிழர் கண்ட பண்புக் கோட்பாடு.
7. அயலவர் ஆதிக்க எதிர்ப்புக் கோட்பாடு.
8. தமிழவரின் சிறுமை -பெருமை நிலைக் கோட்பாடு.
9. மாந்தவியல் உணர்வு -அறிவுக் கோட்பாடு.
10. தமிழ்ர் கண்ட சமயக் கோட்பாடு.
11. தமிழர் படைத்த அரசியல் கோட்பாடு.
12. தமிழர் நிறைத்த பொருளியல் கோட்பாடு
13. *தமிழரின் சமூகவியல் கோட்பாடு*
14. தமிழரின் பெண்மை நலக் கோட்பாடு
15. தமிழரின் உளவியல் (அகப்புறக்) கோட்பாடு
16. தமிழரின் உலகளாவிய மெய்யியல் கோட்பாடு
17. வரலாற்றுப் பார்வையில் குறளாசானின் சிந்தனைக் கோட்பாடு
18. சூழ்நிலை இயலின் வழிக்காணும் இயற்கை இயல்புக் கோட்பாடு.

மேலும் திறமான சிந்தனையுடையோர் இன்னும் பல கோட்பாடுகளைக் காணும் குறள் பெற்றிருக்கலாம்.

திருக்குறளின் பகுப்பு முறையாகிய பால் பற்றியோ, அதிகார வரிசை பற்றியோ, குறள் இடம் பற்றியோ முரண்பட்ட கருத்துக்கள் வந்துள்ளன. அதனை ஆய்தல் பயன் பல தாராத நிலையாகும். இன்றுள்ள வடிவத்தை - அமைப்பினை ஏற்றுக் கொண்டே, திருக்குறளின் அறவியல் அடித்தளத்தை - மைய மாந்த வளத்தை - இனிய இன்ப வாழ்க்கையை, நிறையறிவு என்னும் மெய்யறிவுத்துறவினை, இயற்கை இன்ப இயல்பினை, அரசியல், பொருளியல், நீதியியல், கல்வியல் போன்றவற்றை நாம் அறிதல் இயலும். அத்துடன் அறிவர் நெறி நின்று திருக்குறள் கூறும் கடவுள் - தெய்வம் - இம்மை மறுமை - வான் - விண்ணுலகம் - அகப்புற நிகழ்வுகள் - மாந்தவளம் - சமூக நீதி - இல்லறம் - துறவு நெறி - ஊழியல் - அறவோர் - பண்பாளர் - சான்றோர் - பெரியார் மற்றும் சிறியார், கயவர், பாழ் செய்யும் பல்குழுவினர், ஏதிலார், புல்லறிவாளர், மடியினர், வணிகர், உழவர், உழைப்போர், ஆய்வர், சிந்தனையாளர், ஆள்வோர், அமைச்சர், ஆட்சி நடத்துவோர், மாண்பினர், பெண்மை, ஆண்மை, பெருமை, சிறுமை, சீரிடம், காலக் கணிதம், கரந்துறைவோர், கொடியர், கோட்டம் உள்ளோர், ஒப்புரவாளர், அறிவுடையார், நீத்தார், அறம் நனி உடையார், நல்குரவினர், வறுமை வாய்ப்பட்ட சூழல், இயற்கை செயற்கை, இன்பத்துள் இன்பம், துன்பத்துள் துன்பம், உலகளாவிய ஒட்பம், உலகளாவிய அறவியல், உலகளாவிய பகுத்தறிவுப் பார்வை, உலகு தழுவிய ஒப்புரவு, உலகு போற்றும் உயர்ந்த மெய்யியல் இன்னும் பிற. வான் போன்ற பரப்புடைய திருக்குறளின் வளத்தை நலத்தை - பரப்பினைப் பகுப்பினை - ஆய்ந்து முடிந்த முடிபு கூறல் எளிதன்று. ஆயினும் திருவள்ளுவர் உள்ளம் கண்டு உணர்ந்த அறிவர்தம் ஒகு நெறி நின்று ஒல்லும் வகையினில் பொருள் காண முற்படுவோம்.

# சிறுபஞ்சமூலத்தில் உயிரியல் வழி அறநெறிகள்

*முனைவர் சி. சொர்ணமாலா*
திருச்செந்தூர்

மனித வாழ்விற்கு உறுதிபயக்கும் பொருள்களுள் தலையாயது அறம். அத்தகு அறத்திற்கு 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்று வள்ளுவரும் இலக்கணம் வகுத்துள்ளார். இச்சிறப்பு வாய்ந்த அறநெறியானது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான சிறுபஞ்சமூலத்தில் உயிரியல் வழி எவ்வாறு வலியுறுத்தப் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

## சமண நெறி

பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை, கல்லாமை, கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, அவாவறுத்தல், நாவடக்கம், பிறன்மனை நயவாமை, பொறையுடைமை, கள்ளுண்ணாமை, ஊனுண்ணாமை உள்ளிட்ட தூய கோட்பாடுகளே சமணர்களது நெறியாகும். இச்சமண நெறிகளில் சிலவற்றை உணர்த்துவதற்குக் காரியாசான் சில உயிரினங்களின் வாழ்வியல் முறைகளைச் சான்று காட்டி விளக்குகிறார்.

## உயிரிகள்

அறநெறியைக் காரியாசான் சிலந்தி, எருது, மான், நண்டு, மரங்கள், வித்து, தூக்கணங்குருவி, எறும்பு, புழு, தேனீ, காக்கை, நாய், பூனை ஆகிய உயிரினங்கள் வழி உணர்த்துகிறார்.

## கொல்லாமை, ஊனுண்ணாமை

கண்ணுக்குப் புலனாகா நுண்ணுயிரிகள் கூடத் தம்மால் மிதிபட்டுத் துன்புறக் கூடாது என்று மயிற்பீலியால் விசிறிக் கொண்டு செல்வது சமணத் துறவிகளின் 'கொல்லாமை', பிற உயிர்களைத்

துன்புறுத்தாமை' என்னும் அறநெறிகளாகும். சமணரான காரியாசானும் சிறுபஞ்சமூலத்தில் 'கொல்லாமை' அறத்தை வலியுறுத்துவதற்குப் பூனையாகிய ஐந்தறிவு உயிரைச் சான்று காட்டி விளக்குகிறார்.

கங்கை நதியானது மக்களின் பாவங்களைப் போக்கும் ஒரு புனித நதி என்பது இந்து மக்களின் நம்பிக்கை. அங்குப் பாவங்களைப் போக்குவதற்காகச் செல்பவர்களே உண்டு. மாறாகப் பூனை, நாய், கழுகு போன்ற உயிர்கள் இறந்தவர்களின் உடல்களை உண்பதற்கே கங்கைக் கரைக்குச் செல்கின்றன. பாவத்தைப் போக்குவதற்காக அல்ல. உடலை உண்ணச் செல்கின்ற பூனையின் கடைநிலை ஒழுக்கத்திற்குச் சமமாக உயிர்க்கொலையாகிய புலால் உண்ணுகின்றவர்களது செயல் சிறுபஞ்சமூலத்தில் காட்டப்பெறுகின்றது. இதனை,

*''உண் இடத்தும் ஒன்னார் மெலிவிடத்தும் மந்திரம் கொண்(டு)*
*எண் இடத்தும் செல்லாமை தான்தலையே - எண்ணி*
*உரைப்பூசல் கோறல் உயர்தவ மேல் கங்கைக்*
*கரைப் பூசை போறக்கடை''* (சிறுபஞ்ச. 95)

என்கிறார். அதாவது பிறர் உண்ணுமிடத்துச் செல்லாமை, பகைவர் தளர்ந்த இடத்தும், மந்திராலோசனை செய்யுமிடத்தும் போகாமையே தலையாய ஒழுக்கம். 'ஆன்றோர் அறிவுரைகளுக்கு மாறுபடுதலும் உயர்தவ வேடம் மேற்கொண்ட காலத்தில் ஒருயிரைக் கொன்று தின்னலும், கங்கைக் கரையில் காத்திருக்கின்ற பூனை போல் கடையாய ஒழுக்கம்' என்கிறார்.

### நாவடக்கம்

யாருக்கும் பயனற்ற தீமையான சொற்களைப் பேசாதிருத்தல் நாவடக்கமாகும். வள்ளுவரும்,

*''யாகாவா ராயினும் நாகாக்க - காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு''* (குறள். 127)

என்கிறார். அதாவது நன்மையில்லாத பழிச் சொற்களைப் பேசாது நாவை அடக்க வேண்டும். இத்னையே சிறுபஞ்சமூலமும்,

*"சிலம்பிக்குத் தன்சினை கூற்றம் நீள்கோடு*
*விலங்கிற்குக் கூற்றம் மயிர்தான் - வலம்படா*
*மாவிற்குக் கூற்றமாம் ஞெண்டிற்குத் தன்பார்ப்பு*
*நாவிற்கு நன்றல் வசை"* (சிறுபஞ்சமூலம் 11)

என்று, நாவடக்கத்தைச் சிலந்தி, நீண்ட கொம்புகளுடைய விலங்குகள், மான், நண்டு, ஆகிய உயிரினங்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுக் கூறுகிறது.

## (i) சிலந்தி, நண்டு

சிலந்தி என்னும் பூச்சியானது கருவுற்று, அதன் முட்டைகள் வெளிவரும் போது தாய் சிலந்தி இறந்து போகும். நண்டு என்னும் உயிரியும் தன் உடம்பை வெடிக்கச் செய்து குஞ்சுகளை வெளியேற்றும்.

இதில் சிலந்தி, நண்டு ஆகியவை தனது முட்டைகள், குஞ்சுகளை வெளியேற்றுவதால் இறக்க நேர்கிறது. அதன் இறப்புக்கு முட்டைகளும் குஞ்சுகளுமே காரணமாகின்றன. அதுபோல்தான் ஒருவரின் துன்பத்திற்கு அவரின் வாயிலிருந்து வெளிப்படும் பழிச் சொற்கள் காரணமாகின்றன.

## (ii) எருது, மான்

எருது, மான் முதலிய விலங்குகளுக்கு அதன் நீண்ட கொம்புகளே எதிரி. ஏனெனில் வளைந்தும், நீண்டும், உயர்ந்தும் ஒழுங்கின்மையாகக் காணப்படும் இதன் கொம்புகள், இவை கவனமாக நடந்து செல்லவில்லையாயின் மரங்களிலும், செடிகளிலும் சிக்கி எதிரிகளிடம் மாட்டிக் கொள்ள ஏதுவாக்கும். தன்னுடைய உறுப்புகள்தான்; ஆனாலும் கவனமாகக் காக்கவில்லையெனில் துன்பம் விளையும். அதுபோல்தான் நம்மிடமிருந்து வரும் வாய்ச்சொற்கள் நன்மையானவையாக இருக்க வேண்டும். மாறாகத் தீயனவாக இருப்பின் தீமை உண்டாகும் என்பதைக் கூறுகிறார்.

*"மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்"* (குறள். 969)

என்னும் குறளுக்கு ஏற்ப வெற்றியுடைய, அழகு வாய்ந்த மான் இனத்தின்

ஒரு வகை கவரிமான். கவரி மானுக்கு அதன் மயிரே எமனாகும். இதன் வால் முடியால் செய்யப்படும் சாமரம் கடவுளுக்கும் மன்னருக்கும் பயன்படுத்தப்பட்டது. இம்மானின் முடி உதிர்ந்தால் அதன் அழகு குறைந்து, மானின் வாழ்வும் அழிந்து விடும். அதுபோல ஒருவனுடைய நாவிற்கு வசைமொழிகள் எமனாகும் எனும் கருத்து வலியுறுத்தப்பெறுகின்றது.

### கல்லாமை, அறிவுடைமை

தகுதி சான்ற அறிவு நூல்களைக் கற்றுத் தெரியாதவர் அறிவில் சிறியர் என்றும், கற்றறிந்த பெரியோரே அறிவில் பெரியர் என்றும் கூறும் காரியாசான் இக்கருத்தை ஓரறிவுயிர்களான மரங்களுடனும் விதைகளுடனும் உவமித்துக் காட்டுகிறார்.

### (i) பூவாது காய்க்கும் மரங்கள், விதையாது முளைக்கும் விதைகள்

அத்திமரம், பலாமரம் போன்ற மரங்கள் பூக்காமலே காய்க்கும் தன்மையன. அவைபோல நன்மை அறிபவர் வயதில் சிறியராயினும் அறிவில் பெரியவர்களுக்கு ஒப்பாவர். பல நூல்களைக் கற்றுவல்ல சான்றோர்களும் இத்தகையரே. முறைப்படி பாத்திகட்டி விதைக்காமலேயே நன்றாக முளைக்கின்ற விதைகள் உண்டு. அவை போலவே அறிவுடையோர்க்குப் பிறர் கூறாமலேயே அறிவு வெளிப்படும். இங்குப் பூக்காது காய்க்கும் மரங்கள், பாத்திகட்டி விதைக்காமலே நன்கு முளைக்கின்ற விதைகள் ஆகியவை பலவகையிலும் கற்றறிந்த அறிவுடையோர்க்கு ஒப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

### (ii) பூத்தும் காய்க்காத மரங்கள், விதைத்தும் முளைக்காத விதைகள்

அதே போன்று, பாதிரி மரம் போன்று பூத்தாலும் காய்க்காத மரங்களும் உண்டு. பாத்திகட்டி முறைப்படி அதாவது நிலத்தைச் செம்மை செய்து நீர்விட்டுத் தரமான முறைப்படி விதைகளை விதைத்தும் முளைக்காத விதைகளும் உண்டு. இவை நன்மையறியாத அறிவற்றவர்களுக்கு உவமையாக்கப்பட்டுள்ளன. இதனை,

*“.............................. தாவா*

*விதையாமை நாறுவ வித்துள மேதைக்கு,*

*உரையாமை செல்லும் உணர்வு''* (சிறுபஞ்ச. 22)

என்றும்,

*பூத்தாலும் காயா மரமுள நன்றறியார்*
*மூத்தாலும் மூவார் நூல் தேற்றாதார் - பாத்திப்*
*புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு*
*உரைத்தாலும் செல்லா(து) உணர்வு''* (சிறுபஞ்ச. 23)

என்றும் கற்றவர்களின் செயல் குறித்து கூறுகிறார்.

## (iii) தூக்கணங்குருவி, எறும்பு, கோற்புழு, உலண்டு புழு

தூக்கணங்குருவியால் கட்டப்படும் கூடும், பேரெறும்புகளால் செய்யப்படும் அரக்கும், தூய உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்படும் நூலும், கோற்புழுவால் செய்யப்படும் கோற்கூடும் வேறு எவராலும் செய்ய முடியாதவை. கற்றது கைம்மண் அளவு. கல்லாதது உலகளவு என்பதற்கேற்ப எல்லாம் தெரிந்தவர் என்று எவரும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு செயலில் குறை ஏற்படும். ஆதலால் கற்று வல்லவர் எல்லாம் தனக்குத் தெரியும் என்று மனதில் எண்ணமாட்டார் எனும் கருத்தை உணர்த்தத் தூக்கணங்குருவி உள்ளிட்ட உயிரிகளின் செயல்களைச் சான்று பகர்கிறார்.

## (iv) காகம்

*''பண்டாரம் பல்கணக்குக் கண்காணி பாத்தில்லார்*
*உண்டார் அடிசிலே தோழரில் - கொண்டாரா*
*யாக்கைக்குத் தக்க அறிவில்லார்க் காப்படுப்பின்*
*காக்கைக்குக் காப்படுத்த சோறு''* (சிறுபஞ். 40)

அதாவது கருவூலத்திற்கும், பல்வகைக் கணக்குத் தொழிலுக்கும், மேற்பார்வைத் தொழிலுக்கும், இல்லத் தலைவிகளின் காவலுக்கும், பலர் பகிர்ந்துண்ணும் உணவின் காவலுக்கும், அறிவில்லாதவர்களைத் தங்கள் நண்பர்களைப் போல் எண்ணிக் காவல் தொழிலுக்கு வைத்தால் சோற்றுக்குக் காக்கையைக் காவல் வைத்தது போலாகும். சோற்றைக் காவல் காக்க காக்கையை வைத்தால், தானே அந்தச் சோற்றை அனைத்து

காக்கைகளையும் வரவழைத்துத் தின்று விடும் அல்லது களவாடும் அல்லது களவு போகும். அதுபோல்தான் அறிவற்றவர்கள் தங்கள் செயலைத் திறம்படச் செய்யாது தீங்கு விளைவிப்பர் எனும் கருத்து காக்கை மூலம் உணர்த்தப்படுகின்றது.

## நிலையாமை

### (i) எருது

முன்பு பொருளுடையராய் துன்பமின்றி வாழ்ந்தோம், அப்போது யாமே அழகுடைய்வராக இருந்தோம் என்று கழிந்ததை நினைத்து ஏங்குபவர்களை 'இருகால் எருது' என்கிறார். நான்கு கால்களையுடைய எருதினைப் பிரித்துக் காட்டுவதற்காகவும் மேய்ந்த இரையினை நிதானமாக அசை போட்டுக் கொண்டிருக்கும் எருது போல் நடந்து முடிந்தவற்றை நினைத்து ஏங்கியிருப்பவர்களை அடையாளப்படுத்துவதற்காகவும் 'இருகால் எருது' என்னும் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார்.

மேலும், உருவம், இளமை, அழகு, தாழாத குடி, தாழாத குலம் எனும் ஐந்தும் விரைவில் நீங்கி விடும். இதை எண்ணி இளம் பருவத்திலேயே துறவு மனப்பான்மையைப் பெறாதவர் பாரத்தை இழுத்துச் செல்லும் எருதிற்கு ஒப்பாவர் என்கிறார். இது,

*"இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா*
*வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா*
*புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்*
*மிக்க அறமே விழுத்துணை ஆவது"* (மணி. 135 - 138)

என்னும் மணிமேகலையின் கருத்துடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

## ஒழுக்கமுடைமை, பொறையுடைமை

### (i) நாய் :

நாய் ஐந்தறிவு உயிர். நாணமில்லாதவன், பிறருடன் நட்புக் கொள்ளாதவன், பெற்றோரைப் போற்றாதவன், பிறரின் பணியாளனாய்

இருப்பவன், பரத்தையரது தெருவில் கைப்பொருளில்லாது காதலால் திரிபவன் ஆகியோர் நாய்க்கு ஒப்பாவர் என்கிறார் காரியாசான்.

நாய்க்கு, நாணம், நட்பு கொள்ளல், பெற்றோருடனான உறவு உள்ளிட்ட மனித நியதிகள் இல்லை. மேலும், பருத்தி விற்கும் இடத்தில் நாய்க்குத் தேவையான எந்த உணவும் கிடைக்காது. அதுபோல கைப்பொருளில்லாது பரத்தையர் தெருவுக்குச் செல்கின்றவருக்கும் அவனின் எண்ணம் நிறைவேறாது. மனிதனுக்குரிய நன்னடத்தைகள் எவனிடம் இல்லையோ அவன் ஐந்தறிவு உயிரியான நாய்க்குச் சமம் என்னும் கருத்து இதில் அடங்கியுள்ளது.

## (ii) செவ்வெறும்பு

நெருங்கவும் முடியாமல் விலகவும் முடியாமல் இருக்கும் நெருப்புப் போல அறிவில்லாத இல்லத்தரசியைப் பெற்ற கணவன் 'இருதலைக் கொள்ளி எறும்பு போல' அவளை அண்டி மகிழவும் முடியாமல், பழிச்செயலை எண்ணி நீங்கவும் முடியாமல் துன்புறுவான் எனும் கருத்தை வலியுறுத்த மரநிழற்கண்ணுள்ள செவ்வெறும்பை ஒப்பாக்கிக் கூறுகிறார். நிழல் தரும் மரம் என்று நெருங்க முடியாது. நெருங்கினால் எறும்பானது துன்புறுத்தும். அதே நேரம் நிழலும் தேவை. அது போல மனைவியானவள் உரிமையுடையவளாயின் அவளை விட்டுப் பிரியவும் முடியாது. அதே நேரம் அவளால் இன்னல்களும் அதிகம். இங்கு பொறுமை, விட்டுக் கொடுத்தல் ஆகிய இல்வாழ்வில் முக்கியம் என்பது புலனாகிறது.

## முடிவுரை

இவ்வாறு சிறுபஞ்சமூலத்தில் ஓரறிவு உயிரான மரத்திலிருந்து ஐந்தறிவு உயிர்களான விலங்குகள், பறவைகள் வழி கொல்லாமை, ஊனுண்ணாமை, நாவடக்கம், கல்லாமை, அறிவுடைமை, ஒழுக்கமுடைமை, நிலையாமை, பொறையுடைமை குறித்த அறநெறிகள் உணர்த்தப் பெற்றுள்ளன. இவை மனித வாழ்வில் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டியவையாகும்.

# மூவகை மனித நேயம்

*ஆறுவிரல் ஐம்பொறி*

மனித நேயம் என்பது ஓர் உயரிய பண்பாடு ஆகும். பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணும் பண்பும் பிறரை மகிழ்ச்சிப்படுத்தும் இயல்பும், இரக்க மனப்பான்மையும், கருணை உள்ளமும், உதவும் உணர்ச்சியும் ஒன்று சேர்ந்த ஓர் இனிய கலவையை மனித நேயம் என்று கூறலாம். இதனை நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களின் பாடல் எடுத்துக் கூறுகிறது.

*தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு*
*அமிழ்தம் அவனுடைய வழியாகும் அன்பே அவனுடைய மொழியாகும்*
*மானம் பெரிதென உயிர்விடுவான் மற்றவர்க் காகத் துயர்ப்படுவான்*
*தானம் வாங்கிடக் கூசிடுவான் தருவது மேலெனப் பேசிடுவான்.*

இம்மனித நேயத்தினை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். மனிதன், தன்னினும் உயர்ந்த ஆண்டவனிடம் காண்பிக்கும். மனித நேயம் - பக்தி முதல் வகையாகும். மனிதன் தன்னை ஒத்த மனிதனிடம் காண்பிக்கும் மனித நேயம் – அன்பு இரண்டாவது வகையாம். மனிதன் தன்னினும் குறைந்த அறிவுள்ள புல், மரம், எறும்பு, பறவை, மிருகம் முதலிய உயிர்களிடத்துக் காண்பிக்கும் மனித நேயம் - அருள் மூன்றாவது வகையாம்.

திருப்புகழ், தேவாரம், திருவாசகம், திருவருட்பா, திவ்வியபிரபந்தங்கள் முதலிய பக்தி இலக்கியங்களின் வழி முதல் வகை மனித நேயத்தைப் பெற்றிருந்த பக்தி மிகுந்த இலக்கிய மாந்தர் பலரைக் கண்டு களித்திருக்கின்றோம்.

மனிதன் நன்மையையும், தீமையையும் பகுத்தறியும் ஆறாம் அறிவைப் படைத்தவன் என்பதை 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்று

தொல்காப்பியர் பொருள் - 577ஆம் நூற்பாவின் வழி மொழிந்துள்ளார். ஆறறிவு படைத்த மனிதன் தன்னை ஒத்த மனிதனிடம் காண்பிக்கும் இரண்டாம் வகை மனித நேயத்தைப் பெற்றிருந்த இலக்கிய மாந்தர் சிலரை இங்கே காண்போம்.

கூன், குருடு, செவிடு, பேடு, ஊமை என ஊனமுற்றோர்க்கும், பாதுகாப்பு இல்லாதவருக்கும், நோயுற்றவர்க்கும் உணவிட வேண்டும் என்பதை,

*காணார் கேளார் கால்முடப் பட்டோர்*
*பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்*
*யாவரும் வருக............*

என்று மணிமேகலை - ஆபுத்திரன் திறம் உரைத்த காதை 91-93ஆம் அடிகள் கூறும் அன்பு உள்ளம் மனித நேயத்தின் சிகரமன்றோ.

போர் நிகழப்போவதை வெளிப்படையாக முரசறைந்து தெரிவித்தல் அக்காலத்தில் மரபாக இருந்தது. எதிர்பாராது தாக்குதல், மறைந்திருந்து தாக்குதல், அதிரடித் தாக்குதல், புறமுதுகிடுவாரைத் தாக்குதல் போன்ற அறமல்லாத வழிகளில் அக்கால மாந்தர் போர் செய்யவில்லை என்பதை புறநானூற்றுப் பாடல் வழி அறியலாம்.

*ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்*
*பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்*
*தென்புலம் வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்*
*பொன்போல் புதல்வரைப் பெறா அ தீரும்.*
*எம் அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்க.*

என்று அறிவிப்பு செய்துவிட்டு அறப்போர் செய்த அன்பு உள்ளம் மனித நேயத்தின் சிகரமல்லவா.

கங்கைக்கரை வேடன் குகனை ஐந்தாவது சகோதரனாகவும், குரங்கினமான சுக்ரீவனை ஆறாவது சகோதரனாகவும், அரக்கர் குலத்தவனான விபீடணனை ஏழாவது சகோதரனாகவும் ஏற்றுக்கொண்ட இராமனின் அன்பு உள்ளம் மனித நேயத்தின் சிகரமே.

*குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு*
*பின்பு குன்று சூழ்வான்*
*மகனொடும் அறுவர் ஆனோம்*
*எம்முறை அன்பின் வந்த*
*அகனமர் காதல் ஐய*
*நின்னொடும் எழுவர் ஆனோம்.*

என்ற கம்பரின் (யுத்தகாண்டம் -6635) பாடல் வழி இதனை அறியலாம்.

ஆயுதம் இல்லாத தசமாமுகனிடம் தசரத குமாரன் நல்கிய அன்பு உள்ளம் மனித நேயத்தின் சிகரமல்லவா.

*......................மாருதம் அறைந்த*
*பூளை ஆயின கண்டனை இன்று போய் போர்க்கு*
*நாளை வாவென நல்கினன்..............*

என்ற கம்பரின் (முதல் போர்புரி படலம்) பாடலின் வழி இதனை அறியலாம்.

மனிதன் தன்னினும் குறைந்த அறிவுடைய (ஒன்று முதல் ஐந்தறிவுடைய) உயிரிகளிடத்துக் காண்பிக்கும் மூன்றாம் வகை மனித நேயத்தைப் பெற்றிருந்த இலக்கிய மாந்தர் சிலரை இங்கே காண்போம்.

1. புல்லும் மரனும் ஓரறி வுயிரே. தொல்காப்பியம் - பொருள் - 572.

ஓரறிவுடைய முல்லைக் கொடி பற்றிப் படர்வதற்கு வள்ளல் பாரி தேரை ஈந்தமை மனித நேயத்தின் சிகரம் அல்லவா. ஓரறிவுடைய பயிர்கள் வாடியதைக் கண்டு வாடி வருந்திய வள்ளலாரின் அருள் உள்ளம் மனித நேயத்தின் சிகரமன்றோ.

2. நந்தும் முரளும் ஈரறி வினவே. தொல்காப்பியம் பொருள் - 573.

தேனை உறிஞ்சுகின்ற ஈரறிவுடைய வண்டுகள் பேதுற்று மயங்குமோ என்றஞ்சித் தலைவன் தன் தேர் மணியின் நாவை ஒலிக்காமல் கட்டும் அன்பு உள்ளம் மனித நேயத்தின் சிகரம் அல்லவா. இதனை,

**மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்.**

என்ற அகநானூற்று அடிகளின் மூலம் அறியலாம். ஆர்த்தல் - கட்டுதல்.

**3. சிதலும் எறும்பும் மூவறி வுயிரே. தொல்காப்பியம் -பொருள் - 574.**

சமண முனிவர்களும், புத்தத் துறவிகளும் தாம் நடக்கும் போது மூவறிவு உயிர்களான எறும்புகளும் சிதல்களும் காலில் பட்டு இறக்க நேரிடும் என்று தரையைப் பெருக்கிக் கொண்டே சென்ற அருள் உள்ளம் மனித நேயத்தின் சிகரமே!

**4. நண்டும் தும்பியும் நான்கறி வினவே. தொல்காப்பியம் - பொருள் - 575.**

தும்பியின் நீண்ட வாலில் நூல் கட்டி விளையாடும் பிள்ளைகளுக்கு பெற்றோர் பிற உயிரைத் துன்புறுத்தல் கூடாது என்று அறிவுரைக் கூறி நூல் அவிழ்த்து நான்கறிவுடைய தும்பியை விடுதலை செய்த அருள் உள்ளம் மனித நேயத்தின் சிகரமே.

**5. மாவும் புள்ளும் ஐயறி வினவே. தொல்காப்பியம் - பொருள் -576.**

மடலேறத் துணிந்த தலைவனிடம் பாங்கி மடல் விலக்கலுக்குக் கூறும் காரணங்களுள் ஒன்று ஈண்டு நோக்கற்பாலது.

*மடலகத்தே வெள்ளாங் குருகும், சிறுகருங் காக்கையும் தூக்கணங் குருவியும், முட்டையிட்டுக் குஞ்சு பொறித்திருக்குமே. அன்றிலம் பறவையும் தன் காதற் பெட்டையொடு பிரியாது உடனுறைந்து வாழுமே. அவ்வாறாக மடல் வனையப் பனை மட்டைகளை வெட்டினால் அச்சிற்றுயிர்க்கு இன்னலுண்டாகுமே.*

என்று பாங்கி தலைவனிடம் கூறியதாக ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இலக்கண விளக்கம் (பொருளியல்) என்ற நூலில் பக்கம் 100-இல் கூறியுள்ளார். அக்கால மாந்தர் பறவைகளிடம் காண்பித்த அருள் உள்ளம் மனித நேயத்தின் சிகரமில்லையா ?

கண்ணகி மதுரையை எரித்த போது தீக்கடவுளுக்கு வேண்டுகோள் விடுப்பது மனித நேயத்தை எடுத்துக்காட்டுகிறது.

*பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்*
*மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தார் பக்கமே சேர்க. - சிலம்பு, வஞ்சினமாலை - 53 - 55*

ஆறறிவுடைய மனிதர்களுடன் ஐந்தறிவுடைய பசுவை இணைத்து எரிக்காதே என்ற கண்ணகியின் அருள் உள்ளம் மனித நேயத்தின் சிகரமே.

முதுமையுற்று இறக்கும் விலங்குளைத் தவிர வேறு எந்த உயிர்களிடத்தும் கொலைத் தொழிலைச் செய்யாதொழிக என்று மணிமேகலையில் சாதுவன் நாகர் தலைவனிடம்,

*மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டும்*
*தீத்திறம் ஒழிக.*

என்று வேண்டிய அருள் - உள்ளம் மனித நேயத்தின் சிகரமன்றோ. மூத்துவிளி மா - முதுமையுற்று இறக்கும் விலங்கு.

ஐந்தறிவுடைய ஒரு புறாவுக்காகத் துலாக்கோல் தட்டில் ஏறி அமர்ந்த சிபிச் சக்ரவர்த்தியின் அருள் உள்ளம் மனித நேயத்தின் இமயமே. குளிரால் நடுங்கிய ஐந்தறிவுடைய மயிலுக்குப் போர்வை அளித்த வள்ளல் பேகனின் அருள் உள்ளம் மனித நேயத்தின் இமயமே.

போருக்கு முன் ஆநிரை கவர்தல் அக்கால மரபு. அவ்வாறு சென்ற பசுக்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்து உணவளித்துக் காத்தனர். பகைவரின் பசு என்பதால் ஐந்தறிவுடைய பசுக்களுக்குத் துன்பம் செய்யவில்லை என்பது ஈண்டு மனங்கொளத்தக்கது. வெட்சித்திணையின் இருபது வகை துறைகளுள் சுரத்துய்த்தல் என்பது ஒரு துறையாகும். வெட்சியார் கைப்பற்றிய ஆநிரைகளைச் சுரத்தின் கண்ணும் காட்டின் கண்ணும் அவற்றிற்கு வருத்தம் ஏற்படாதவாறு செலுத்திச் செல்லுதல் என்பதே சுரத்துய்த்தல் என்ற துறையின் பொருளாம். இந்த அருள் உள்ளம் மனித நேயத்தின் சிகரமன்றோ.

மனிதனுக்கு மனித நேயம் இல்லெனில் ஆறறிவு படைத்ததற்கு அர்த்தம் இல்லை. மனித நேயம் இல்லாத மனிதன் ஐந்தறிவுக்குக் குறைவான அறிவுடைய உயிர்களுக்கு நிகரானவன் ஆகின்றான். எனவே மனித நேயத்தைக் கடைப்பிடித்து நமக்குள்ள ஆறறிவை உறுதிப்படுத்துவோமாக.

# அருளம்பலவனாரின் திருவாசக ஆராய்ச்சி உரையில் சொற்பொருள் விளக்கம்

*கோ. கௌதமன்*
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழ்மொழியின் வளத்திற்கும் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும், கற்பிக்கும் ஆசிரியப் பெருமக்களும் பெரும் பங்காற்றியுள்ளனர். இவ்வகையில் ஈழத்திலே பிறந்த பண்டிதமணி சு.அருளம்பலவனார் ஆற்றிய உரைப்பணியும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்து உரையாசிரியர்களிலே பண்டிதர் சு.அருளம்பலவனார் வியந்து குறிப்பிடப்பட வேண்டியவர். இவர் திருவாசகத்திற்கு ஆராய்ச்சியுரை எழுதுவதற்கு முன்னர் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து ஆகியவற்றிற்கு ஆராய்ச்சியுரை எழுதியவர். உரையெழுதுவதில் நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர். இடையறாது கற்றலிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்த அருளம்பலவனார் திருவாசகத்திற்கு எழுதிய ஆராய்ச்சியுரை, ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது 1973-ஆம் ஆண்டு வெளிவந்தது.

## பதவுரை

அருளம்பலவனாரின் திருவாசக ஆராய்ச்சியுரை பதவுரை, பொழிப்புரை, ஆராய்ச்சியுரை எனும் அமைப்பிலே எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிகத்திற்கும் முதலில் அறிமுகமாகப் பதிக விளக்கமும், அது பாடப்பட்ட தலமும், தேவை நோக்கி உள்ளுறைப் பொருளும் சுட்டிய பின்னரே பதவுரையையும் எழுதுகின்றார். செய்யுளைக் கொண்டு கூட்டி, எழுவாய் எடுத்துச் சொற்களைப் பொருளால் பிரித்த பின்னரே பதவுரை எழுதுகிறார். திருச்சதகம் ஆத்துமசுத்தி முப்பந்தைந்தாவது 35 செய்யுளில் அருளம்பலவனார் எழுதும் பதவுரையை இதற்கு எடுத்துக்காட்டாகத் தரலாம்.

"'துணை இலி பிணநெஞ்சே - எனக்குத்துணையாக இல்லையான பிணம்போலப் பயணற்றுக் கிடக்கும் நெஞ்சமே!

கூத்து உடையான் கழற்கு அன்பு இலை - திருக்கூத்தையுடைய சிவபெருமான் திருவடிக்கண் அன்பு செய்கின்றிலை,

என்பு உருகி பாடுகின்றிலை - அன்பின்மையா என்பு உருகப்பாடுகின்றாயுமில்லை. ஆடுகின்றிலை - பாடலின்மையால் அதற்கேற்ற ஆனந்தக் கூத்து ஆடுகின்றாயுமில்லை.

பதைப்பதும் செய்கிலை - இறைவன் திருவருளைப் பெறவேண்டுமென்று துடித்தலும் செய்கின்றாயில்லை.

பணிகிலை - வணங்குகின்றாயுமில்லை. பதமலர் சூடுகின்றிலை - இறைவன் திருவடியாகிய மலரை நின்தலைமேற் சூடுகின்றாயுமில்லை,

சூட்டுகின்றதுமில்லை - அவ்விறைவன் யாண்டு உள்ளான் என்று தேடுகின்றாயுமில்லை,

தெருவுதொறு அலறிலை - தெருக்கள் தோறும் அவ்விறைவனைத் தேடி அலறுகின்றாயுமில்லை. நீ இவ்வாறு பிணம்போற் பயனற்றுக்கிடப்பின்,

செய்வது ஒன்று அறியேன் - உன்னோடு கூடியான் உய்தி அடைவதற்குச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன்''1

இவ்வாறு செய்யுளில் வரும் பதப்பொருளை மட்டும் குறிப்பிடாமல், செய்யுள் சுட்டும் பொருளைத் தொகுத்தும் பகுத்தும் விரித்தும் தொடர்புபடுத்திப் பதவுரையாகக் கூறுவதை மேலே சுட்டிய பகுதியில் இருந்து அறியமுடிகிறது. இவரது பதவுரையிலே பொழிப்புரையின் தன்மையும் காணப்படுகின்றது. பதவுரை கூறிய பின்னர் செய்யுள் கருதிய பொருளைத் தொகுத்துத் தருகின்றார்.

## செய்யுள் பொருளைத் தொகுத்துக் கூறுதல்

பொழிப்புரையாக அமையும் தொகுப்புரையிலே பெரும்பாலும் செய்யுளில் வழங்கும் சொற்களையே கையாளுகின்றார். மாணிக்கவாசகரின் சொற்களினாலே தொகுத்துச் கூறினால் பொருளின் ஆழமும் நயமும் பக்தியுணர்வும் புலப்படுமென்பது அருளம்பலவனாரின் கருத்தாக இருந்திருக்கலாம் என்பதையும் அறியமுடிகிறது.

கோயின் மூத்த திருப்பதிகம் 384-ஆம் பாடலுக்கு, ''நின்மெய்யன்பர்கள் சிரிப்பார்கள், களிப்பார், தேனிப்பார், திரண்டு திரண்டு உன்வார்த்தைகளை விரித்துரைப்பார்கள். அதனை விரும்பிக் கேட்பார்கள், மெச்சுவார்கள், வெவ்வேறிருந்து உன் திருநாமத்தைத் தரிப்பார்கள். பொன்னம்பலத்தாடும் தலைவா என்பார்கள். அவர்களுக்கு

எதிரில் நரியைப் பாய்ந்து பிடிக்கும் நாயாக நான் இருப்பேனோ? நம்பி இனியாயினும் வீடுபேற்றினைத் தந்தருள்வாள் என்பதாம்"2 என்று, மாணிக்கவாசகரின் சொற்களாலேயே செய்யுள் சொல்கின்ற பொருளைத் தொகுத்துத் தந்துள்ளார். "நரிப்பாய் நாயேன் நாயேன் இருப்பேனோ" என்பதற்கு நரியைப் பாய்ந்து பிடிக்கின்ற நாயாக நான் இருப்பேனோ என அருளம்பலவனார் பொருள் கொள்கின்றார்.

## சொற்பொருள் விளக்கம்

பதவுரையிலே சொற்களுக்குப் பொருள் மட்டும் கூறிய இவர், ஆராய்ச்சியுரை என்னும் பகுதியிலே சொற்களுக்குப் பொருள் விளக்கமும் கூறிச் செல்கிறார். பாடலில் இடம்பெறும் முக்கியமான சொற்களுக்குத் தகுந்த சான்றாதாரங்களோடு பொருள் விளக்கம் கூறுவதுடன் அச்சொற்களின் பயில்நிலைப் பொருத்தப்பாட்டினையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

பல இடங்களில் சொற்களின் மூலத்தைக் குறிப்பிட்டுப் பொருள் விளக்கம் செய்யும் அருளம்பலவனார், சொற்களை இனங்கண்டு " இவை வடசொற்கள்", "இவை திசைச் சொற்கள்" எனக் குறிப்பிடுவது இவரது உரையின் சிறப்பம்சமாகும்.

உதரம்-வயிறு, "உதரமொடு சடரமகடும் வயிறே" என்பது பிங்கலந்தை- ஈண்டு கருப்பையை உணர்த்தியது. உறின என்னும் வடசொல் ஈனம் என்றாயிற்று. கிருமி-புழு, வடசொல்"3 ஆகும். "அச்சன்-தந்தை, திசைச்சொல், தந்தையை அச்சன் என்பது குடநாட்டார் வழக்கு என்பர் நச்சினார்க்கினியர்" 4

"அதெந்து ஒரு திசைச்சொல் கன்னடமொழியில் அஞ்சற்க எனப்பொருள் படுவதொரு திசைச்சொல், இனி, அதனை அது எந்து எனப்பிரித்து அது என்ன என பொருள்படும் மலையாளச் சொல்லாகக் கொள்ளுதலுமுன்" 5

## சொற்களைப் பிரித்துப் பொருள் கூறுதல்

இவ்வாறு பல்வேறிடங்களிலும் தமிழில் வழங்கும் வடசொற்களையும், திசைச் சொற்களையும் சுட்டிக் காட்டிப் பொருள் விளக்கம் செய்கின்றார். பொருளுக்கு இயைபுபடச் சொற்களைப் பிரித்து பொருள் கூறுவதும் இலக்கண மரபுவழி சொற்பொருள் உரைத்தலும் அருளம்பலவனாரின் ஆராய்ச்சியுரையின் சிறப்பாகும்.

என்னானை - என் + ஆன் + ஐ, என்னுயிர்த் தலைவன் பசுபதி என்பது பொருள். "எங்கள் நாயகனே என்னுயிர் தலைவா" என அடிகள் பிறிதோரிடத்தும் கூறியுள்ளார்.

## மேற்கோள் காட்டல்

ஆண்-பசு, உயிர்-ஐ-தலைவன், இப்பொருட்டாத "என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்" (குறள்: 771) என்புழி, என்னை என்பதற்கு, என் தலைவன் எனப் பரிமேலழகர் பொருளுரைத்துள்ளார்.

என்னானை என்று இறைவனைக் கூறுதலை, "என்னானை என்னப்பன் என்பார் கட்கின்னமுதை" என்புழி. இனி என்னானை என்பதனை என்னான் ஐ எனப் பிரித்த என் உள்ளத்திலுள்ளவன், என் தலைவன் என்றும் உரைக்கலாம். "என்னானாய என்னினல்லால் என்று அப்பரடிகள் அருளியுள்ளார்." 6

## நயம் காட்டுதல்

சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பொருள் கூறும் பொழுது அவை நயவுரையாக அமையுமிடங்களும் உண்டு. நீத்தல் விண்ணப்பம் 122 ஆம் பாடலில் "விருந்தினேனை" என்பதற்கு,

விருந்தினேனை - புதிய அடியவனாகிய என்னை விருந்து - புதுமை, இறைவனோடு போந்த மெய்யடியார்கள் பழவடியார்களாதலின் அவர்கள் முன்னே ஆட்கொள்ளப்பட்டதாம் புதிய அடியன் என்னும் கருத்தினராய் விருந்தினேனை என்றார்.

## முடிவுரை

அருளம்பலவனாரின் ஆராய்ச்சியுரை பல்வேறிடங்களிலும் காணமுடிகிறது. சொற்பொருள் விளக்கத்தின் பொருட்டும் பலவகையான மேற்கோள்களையும் காட்டிச் செல்வதைப் பின்வரும் பகுதிகள் தெளிவு படுத்துகின்றன என்பதை இதன் மூலம் அறியமுடிகின்றது.

## சான்றெண் விளக்கம்

1. அருளம்பலவனார். சு. திருவாசக ஆராய்ச்சியுரை முதலாம் பாகம், பக்.249-250.

2. அருளம்பலவானர்.சு. (உரை) திருவாசக ஆராய்ச்சியுரை, இரண்டாம் பாகம், அருளம்பலம், திருமதி.வி. (வெளியீடு காரை நகர், யாழ்ப்பாணம்), 1973, ப.915.

3. அருளம்பலவனார். சு.(உரை) திருவாசக ஆராய்ச்சியுரை, முதலாம் பாகம், ப.10.

4. மேலது, ப.132.

5. மேலது, ப.244.

6. அருளம்பலவனார். சு. (உரை) திருவாசக ஆராய்ச்சியுரை முதலாம் பாகம், ப.411.

# நற்றிணை நாராயணசாமி ஐயர்

*சி. ஆறுமுகம்*
**சிதம்பரம்**

எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக அமைந்த நற்றிணைக்கு முதன் முதல் உரை கண்டவர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர். இவர், தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சார்ந்த பின்னத்தூரில் அப்பாசாமி ஐயர் - சீதாலட்சுமி அம்மாள் தம்பதியரின் அரும்புதல்வராக 10.9.1862இல் பிறந்தார். இவருக்கு மூன்று தம்பிகளும் மூன்று தங்கைகளும் உண்டு. பின்னாளில் இவரின் ஊர்ப்பெயரோடு சேர்த்துப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் என அழைக்கப்பட்டார்.

## தமிழ் ஆர்வம்

மன்னார்குடி ஆங்கிலப் பள்ளித் தமிழாசிரியர் நாராயணசாமிப் பிள்ளையின் கம்பராமாயண விரிவுரையைக் கேட்டு அதனைக் கற்க பேரவா கொண்டார். இதுதான் இவர் தமிழ் கற்கக் காரணமாக அமைந்தது எனலாம். மனப்பாடத்திறம் இயல்பாக வாய்த்திருந்த இவர் எண்ணற்ற பாடல்களை மனப்பாடம் செய்தார். "பத்துப்பாட்டு முதலியவற்றின் சுவடிகள் கிடையாமல் போயினும் அவற்றின் அடிபிறழாமல் ஒப்பிக்க வல்ல திறனாளர் நாராயணசாமி ஐயருள்ளார்" என்று டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரால் பாராட்டும் சிறப்பும் பெற்றார்.

## ஆசிரியப் பணி

தமிழ் அறிஞர்களைத் தேடிப் பாடங்கேட்டுக் கொண்டிருந்த நாராயணசாமி ஐயர், பிறருக்குத் தமிழ்ப் பாடம் சொல்லும் ஆசிரியராக 1899ஆம் வருடம் முதல் கும்பகோணம் நகரவை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி 30.07.1914இல் இறையடி சேர்ந்தார்.

## பல்துறைப் புலமை

தமிழ் மட்டுமல்லாது வடமொழியிலும் புலமை மிக்கவர் என்பது அவர் மொழி பெயர்த்த காளிதாசரின் பிரகசன நாடகமே சான்று பகரும். தமிழ் நாட்டு வரலாற்றினையும் தமிழ்ப்புலவர் வரலாற்றினையும் அறிய முயன்று வெற்றி கண்டு கல்வெட்டறிஞராகத் திகழ்ந்த இவரின் மாணாக்கர்களுள் ஒருவரான சதாசிவ பண்டாரத்தார் பிற்காலத்தில் கல்வெட்டறிஞராகத் திகழ்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## படைப்புகள்

இலக்கியத்தோடு இலக்கணத்திலும் நாட்டம் செலுத்திய ஐயரவர்கள் தொல்காப்பியத்தையும் ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தார். அதன் பயனாகப் புதிதாகப் பொருளதிகாரம் படிப்பவர்க்கு அதிலுள்ள மேற்கோள்களைப் புரிந்து கொள்ளத் தனியாக ஓர் அகராதியை உருவாக்கினார். கல்வி கற்க வழிகாணாது வறுமையில் வருந்தும் மாணாக்கனொருவனை நல்வழிப் படுத்தும் பொருட்டு, கல்வி பயின்று மேம்பட்டு - அதனால் அரசாங்கத்தில் சிறப்புப் பட்டம் பெற்று அதிகாரமும் பெற்றவன் ஒருவன் ஆற்றுப்படுத்துவதாக மாணாக்கராற்றுப்படை என்னும் நூலையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய இயன்மொழி வாழ்த்து என்னும் நூலுக்கு உ.வே. சாமிநாதைய்யர் அ்வர்கள் சிறப்புப் பாயிரமும் இயற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பின்னதூராரின் இயன்மொழி வாழ்த்து, தென்றில்லையுலா, தென்றில்லைக் கலம்பகம், களர்ப்புராணம், இராமயண அகவல் முதலியன அச்சிடப்பட்டுள்ளன. இவர் எழுதி அச்சில் வெளிவராத நூல்கள் பிரகசன நாடகம், இடும்பவனப் புராணம், இறையனாராற்றுப்படை, சிவபுராணம் (ஞான சங்கிதை,) சிவகீதை, நரிவிருத்தம், மருதப்பாட்டு, செருப்புவிடுதூது, தமிழ்நாயக மாலை, அரதைக் கோவை, வீரகாவியம் என்பன.

## நற்றிணை உரை

நற்றிணையை ஆராய்ந்து வெளியிட விரும்பிய நாராயணசாமி ஐயருக்கு அவர்தம் ஆசிரியரின் மைந்தர் சோமசுந்தரம் பிள்ளை பொருள்

உதவி செய்ததுடன் ஏடுகள் தருவித்தும் ஆராயச் செய்தார். தனக்குக் கிடைத்த சுவடிகளைக் கொண்டு ஒப்புநோக்கி ஒருவாறு ஆராய்ந்து உரைகண்டார். எனினும் 234ஆவது பாடலும் 385ஆம் பாடலின் பிற்பகுதியும் கிடைக்காமல் போயின. பிறகு அவை கிடைப்பின் மறுபதிப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என்னும் எண்ணத்தில் பதிப்புப் பணிகளில் ஈடுபட்ட ஐயவர்கள் சில தமிழன்பர்களின் பொருளுதவியால் நற்றிணையை அச்சிட்டார். இவர்தம் உரையுடன் நற்றிணை, சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திர சாலையில் 1915இல் அச்சில் பதிக்கப் பெற்று வெளிவந்தது. ஆனால், அதற்கு முன்பே ஐயரவர்கள் இறையடி சேர்ந்தார் என்பது வருத்தத்திற்குரியது.

இந்நற்றிணை உரை முதல் உரை எனினும் முதன்மை உரையாக விளங்கியது. பின்னத்தூராரின் சிறந்த புலமைத் திறத்தைக் காட்டுவதாக அமைந்தது. ஒவ்வொரு பாடலும் இன்னார் பாடல் என்பதை முதலில் அமைத்து, திணை துறைகளைக் கூறி, அதனை விளக்கிப் பாடலைக் காட்டுகிறார். பாடலின் முழுப்பொருளும் தெளிவாக விளங்குமாறு முறையுறக் கிடந்த வகையில் உரையமைக்கிறார். அருஞ்சொற்பொருளும், அருந்தொடர் நயமும், அணி, பொருள், நலன்களும் விளங்க விளக்கவுரை வரைகிறார். ''உள்ளுறையைப் பொருத்தியும் மெய்ப்பாடும் பயனும் மெச்சும் வண்ணமும் குறிக்கிறார். மேற்கோளாட்சியைக் காட்டி ஒப்புமையை உவகையுறத் தருகிறார். இவர் எழுதியுள்ள பாடினோர் வரலாறும் பாடப்பட்டோர் வரலாறும் செறிவும் செம்மையும் மிகுந்து இன்புறத்துவனவாகும். இவ்வுரை, "நற்றிணை நாராயணசாமி ஐயர்'' என்னும் பெயரை நிலைநிறுத்திய அரிய ஆராய்ச்சி உரையாக விளங்கி மகிழ்விக்கிறது.

# வன்முறை

*சா. இளையராஜா*
அண்ணாமலை நகர்

வன்முறை சமூகச் சீரழிவிற்கு ஒரு காரணமாக அமைகின்றது. தொழிலாளி முதலாளிக்கு இடையே வேறுபாடுகள் ஏற்படும்போதும் சாதிய ஏற்றத்தாழ்வுகள், பொருளாதாரச் சுரண்டல் முற்றும் போதும் வன்முறைகள் ஏற்படுகின்றன என்பதை அறியமுடிகிறது. மேலும் அரசியல், சமய உணர்வுத் தூண்டல்களும் வன்முறைக்கு இடமளிக்கின்றன. எனவே ஞானகூத்தன் கவிதைகளிலிருந்து வன்முறை பதிவுகள் ஆராயப்படுகின்றன.

அண்மைக்காலமாக இந்தியாவில் வன்முறைகளின் வேகம் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. இந்தியா விடுதலை பெற்று 60 ஆண்டுகளுக்கு மேலாகியும் மக்களின் தேவைகள் பூர்த்தி அடையாமல் இருப்பதால், அவர்கள் வன்முறைகளின் மூலமாகவே உரிமைகளைப் பெற நினைக்கின்றனர்.

சாதி, சமயம், அரசியல், சினமாத்துறை கல்வி பயிலும் மாணவர்கள் போன்றவர்களால் வன்முறைகள் அதிகமாக நிகழ்கின்றன என்று கூறலாம். இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக ஞானக்கூத்தன் அரசியல் மூலமாக ஏற்படும் வன்முறைகளை கவிதையின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். இதனை,

*"கூட்டத்துக் காரர்கள் கோஷமிட்டுக்*
*கும்பலாய்க் கடைத் தெருவுக்குள் போனார்கள்*
*கண்ணாடி கதவுகளை உடைத்தார்கள்.*
*பெயர்ப் பலகைகளை உடைத்தார்கள்*
*குழல் விளக்குகளை உடைத்தார்கள்"*

என்பதன் மூலம் அரசியல் வன்முறைக்காரர்கள் பொதுச் சொத்திற்கு ஏற்படுத்தும் தீமைகளை வெளிப்படுத்தியுள்ளார். இன்று ஏன் அரசியல்காரர்களால் வன்முறைகள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணமென்ன என்பதை ஆராயும் போது, "முதிர்ச்சி அடையாத, முழுக்கல்வி பெறாத பொது மக்கள் அத்தனை பேருக்கும் வயது அடிப்படையில் வாக்குரிமை கொடுக்கப்பட்டதாலும், கட்சி வழித்

தேர்தலும், சனநாயக முறையும் கொண்டுவரப்பட்டதாலும், கூட்டமே அரசியல் ஆயிற்று. ஊர்வலம், சாலைவழி மறித்தல், கதவு அடைத்தல் ஆகியவை அரசியல் நெறிகள் ஆகிவிட்டன. ஒவ்வொன்றிற்கும் கூட்டம் சேர்ப்பது என்பது இயல்பாகி விட்டது. சமூகவியல் விதிப்படி ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாத பெரும் கூட்டம் சேரும் போது கூட்டத் தலைமையாளர்களால் கூட்ட நபர்களைக் கட்டுப்படுத்த முடியாது; கூட்டம் தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கிவிடும். வன்முறை, கல்லெறிதல், தீ வைத்தல் முதலானவற்றில் ஈடுபடும். எனவே, அரசியல்வாதிகளின் கூட்டம் சேர்த்தலே அரசியல் வன்முறைக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன'' என்று க.ப. அறவாணன் குறிப்பிட்டுள்ளார் என்பது கருதத்தக்கது.

இவ்வாறு வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் கடைகளை மூடச்சொல்லி விரட்டுவதும், கடைகளை அடித்து நொறுக்குவதும் செய்கின்றனர் என்பதை ஞானக்கூத்தன் தன் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

*''கையில் கொடி ஏந்திய சிலபேர்*
*கடையை மூடென்று கட்டளை இட்டனர்*
*முக்காலியைத் தெருவில் உதைத்துக் கூவினர்*
*கால் மேலாகத் தெருவில் கிடந்தது முக்காலி''*

இவற்றின் மூலம் வன்முறைக்காரர்களின் அடாவடித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வன்முறைக்காரர்கள் அரசு சொத்துக்கள் மட்டுமின்றி மக்களின் வீடுகளையும் அடித்து நொறுக்குகின்றனர். இதனால் குறிக்கோள் நிறைவேறுவதைக் காட்டிலும் பொதுமக்களுக்குப் பெருஞ்சேதமே ஏற்படுகின்றன என்று ஞானக்கூத்தன் குறிப்பிட்டுள்ளார்.

*''வீட்டுக் கண்ணாடி ஜன்னலின் மீது*
*விஷமிகள் சிலபேர் கல்லை எறிந்தார்கள்*
*கோஷமும் அவர்கள் எழுப்பினார்கள்*
*பிற்பகல் நேரம் ஆழமாய் சிந்தித்து*
*மனதில் எதையோ தேடும்போது*
*.........................*
*.........................*
*உடைந்த கண்ணாடி ஜன்னல் வழியே*
*அஞ்சல் ஊழியர் உறைகளை எறிந்தார்*
*காலை நாளிதழ் அதன் வழி விழுந்தது*
*ஒட்டையாய் மாறிற்று உடைசல் இப்போது*

*தெருவை நானும் தெருவில் போவோர்*
*எனது வீட்டையும் அதன்வழி பார்க்கத் தொடங்கினோம்''*

என்பதிலிருந்து அரசியல் வன்முறைக்காரர்கள் மக்களின் சொத்திற்கு ஏற்படுத்தும் துன்பங்களை அங்கத முறையில் சாடியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

வன்முறைகள் எதனால், யாரால் அதிகமாக நிகழ்கிறது என்பதை ஆராயும் போது, க.ப.அறவாணன் வன்முறைகளைப் புள்ளி விவரத்தில் தந்துள்ளார். அவற்றைக் கீழே காணலாம்.

**ஆசிரியர்கள் பார்வையில் வன்முறைக்குக் காரணம்**

| **காரணம்** | **விழுக்காடு** |
|---|---|
| சாதி | 45.45 |
| மதம் | 27.27 |
| அரசியல் | 24.24 |
| விடுதி | 3.04 |
| கல்லூரி | 0 |
| வகுப்பு | 0 |
| ஆசிரியர்கள் | 0 |
| பிற திரைப்படம், சினிமா | 100% |

**மாணவர்கள் பார்வையில் வன்முறைக்குக் காரணம்**

| **காரணம்** | **விழுக்காடு** |
|---|---|
| சாதி | 41.59 |
| மதம் | 23.18 |
| அரசியல் | 18.35 |
| கல்லூரி | 7.72 |
| விடுதி | 6.28 |
| வகுப்பு | 1.44 |
| ஆசிரியர்கள் | 0.96 |
| பிற திரைப்படம், சினிமா | 0.48 |
| | 100% |

எனவே ஆசிரியர் பார்வையிலும், மாணவர் பார்வையிலும் 'சாதி' முதல் காரணமாகவும், 'மதம்' இரண்டாவது காரணமாகவும், அரசியல் மூன்றாவது காரணமாகவும் விளங்குகின்றன என்பதை அறியமுடிகிறது.

இவ்வாறு ஏற்படும் வன்முறைகளால் நாடு முன்னேற்றம் அடைவதை விட சீரழிவுக்கே உள்ளாகின்றன. எனவே வன்முறைகளைக் கைவிட்டு சகோதரத்திற்காக ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். அப்போது தான் இந்தியா வல்லரசாக உருவாக முடியும் என்பதை ஞானக்கூத்தன் கவிதையின் வாயிலாக அறியமுடிகிறது.

# பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் போர்த்திறம்

ஜெ. உமா
பேராஷூரணி

## முன்னுரை

பதிற்றுப்பத்து என்பது சங்க இலக்கியப் புறநூல்களில் ஒரு தொகுப்பு நூலாகும். இதில் பத்துப் புலவர்களின் பாடல்கள் இடம்பெற்றிருந்தன என்பது பதிற்றுப்பத்து என்னும் நூலின் பெயரால் தெரியவருகிறது. ஒவ்வொரு புலவரும் ஒவ்வோர் அரசனைப் புகழ்ந்து பத்துப்பாடல்கள் பாடியுள்ளனர். அந்தப் பாடல்கள் முதற்பத்து, இரண்டாம்பத்து, மூன்றாம்பத்து என்னும் முறையில் எண் குறியீட்டுப் பெயரால் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதல்பத்தும், இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. இடையிலுள்ள எட்டுப் பத்துக்களே கிடைத்துள்ளன.

பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்தவர் ஒவ்வொரு பத்துப் பாடல்களைப் பற்றியும் பதிகம் என்னும் பெயரில் சில தெளிவான உண்மைகளைத் தெரிவிக்கின்றார். இந்தத் தொகுப்பாசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு சிறப்புப் பெயர் இட்டுள்ளார். இன்னின்ன சிறப்புப் பெயர் கொண்ட பாடல்கள் இன்னின்ன பத்தில் அடங்கியுள்ளன என்றும் கூறியுள்ளார். இந்தப் பத்துப் பாடல்களையும் பாடிய புலவர் இன்னார் என்பதும், அவரால் பாடப்பட்ட அந்தப் பத்து இன்ன சேர அரசனைச் சிறப்பித்துக் கூறுகிறது என்பதும், அந்தச் சேர அரசன் இன்னார்க்கு இன்ன உறவு முறையினன் என்பதும் அவரது பதிகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மற்றும் இந்தப் புலவர் இந்தச் சேர அரசனை இந்தப் பத்துப் பாடியதற்காக இன்ன பரிசு பெற்று இவ்வாறு சிறப்பிக்கப்பட்டார் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த அரசன் இத்தனை ஆண்டுகள் அரசனாய் விளங்கினான் என்னும் செய்தியையும் குறிப்பிட்டுள்ளார்.

பதிற்றுப்பத்தில் இரண்டு கால்வழியைச் சேர்ந்த அரசர்கள் (உதியன் கால்வழி, அந்துவன் கால்வழி) சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரையில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் போர்திறம் குறித்து ஆராயப்படுகிறது.

## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

சங்க காலத்தில் சேரலாதன் என்னும் பெயர் கொண்ட அரசர் நால்வர் இருந்தனர். நெடுஞ்சேரலாதன் இரண்டுபேர். இவர்கள் முறையே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் என்போர் ஆவர். பெருஞ்சேரலாதன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆகியோர் மற்ற இருவர் ஆவர். பதிற்றுப்பத்து நூலில் இடம்பெற்றுள்ள இரண்டாம் பத்து குமட்டூர்க்கண்ணனார் என்னும் புலவர் இவனைப் பாடுவதாக அமைகிறது.

### காலம்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவனைப் பாடியதற்காக குமட்டூர்க்கண்ணனார் 38 ஆண்டுகள் தென்னாட்டில் இருந்துவரும் வருவாயில் பங்கு பெற்றார். இதனை நெடுஞ்சேரலாதன் தனது ஆட்சிக்காலம் முடியும் வரையில் தந்திருக்க வேண்டும். எனவே இரண்டாம் பத்தானது இவனது இருபதாம் ஆட்சியாண்டில் பாடப்பட்டது எனலாம். இவனது முன்னோர்கள் நாவலந்தண்பொழில் முழுவதும் ஆட்சிபுரிந்து புகழுடன் விளங்கினர் (பதி. 14:19-20). இவனது தந்தை அந்துவஞ்சேரலாதன். தாயார் நல்லினி ஆவார்.

### போர்த்திறம்

இமயத்தில் வில்லைப் பொறித்தான் என்று பதிற்றுப்பத்தின் பதிகம் கூறுகிறது.

*“......................இமையம் விற் பொறித்து*
*இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்*
*தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு”* (பதி. 2:4-6)

மேற்கண்ட பாடலில் இடம்பெற்றுள்ள ‘கோல்நிறீஇ’ என்ற சொல்லாட்சிக்குப் பொருள் ஆட்சியை நிலைநாட்டினான் என்பது பொருளாகும். தமிழக வரலாற்றில் ஆட்சியை நிலைநாட்டுதல் என்பது அரசாளுதலை மட்டும் குறிக்கும் சொல் அன்று. பிறர் பணிந்து கொடுத்துப் பின்னர் மீண்டாலும் திறை தந்த நாடு, திறை பெற்ற மன்னனின் ஆட்சிக்குக் கீழ் இருந்ததாகவே கருதப்படும். (பதிற்.பதி. 2:10-12)

இந்த வகையில் நெடுஞ்சேரலாதன் இமயமலைப் பகுதியில் ஆட்சியை நிலைநாட்டியதாகப் பதிகம் கூறுவதால் இமயம் முதல் குமரி வரை வென்றான் (பதி. 11:23-24) என்பது பொருளாகும்.

இவனும் இவனது படைவீரர்களும் எழுமரம் போன்ற உறுதியான நெஞ்செலும்பை உடையவர்கள்.

*"எழுமுடி கெழீஇய திருநெமர் அகலம்"* (பதி. 2:14-11)

முறுக்கான உடற்கட்டு உடையவர்கள்

*"வயவர் வேந்தே"* (பதி. 2:15-21)

நெடுஞ்சேரலாதன் யானை மீதேறிப் போர்க்களம் சென்றான்

*"போர்வல் யானைச் சேரலாத"* (பதி. 2:15-23)

சேரலாதன் படையெடுத்துச் சென்றபோது கூளியர்கள் காட்டுப் பாதைகளில் படை செல்ல வழி அமைத்துக் கொடுத்தனர். இதற்கு மாறாக நெடுஞ்சேரலாதன் வெற்றி பெற்ற நாடுகளில் உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்தனர். வயவர்கள் தம் வேல்களில் இருந்த புலித்தோல் உறைகளை நீக்கிவிட்டு ஏந்திச் சென்றனர். முரசு முழக்குவோர் குருதி பாயும் போர்க்களத்தைக் காணும் விருப்பத்தோடு செந்தினையில் குருதியைக் கலந்து தூவிப் போர் முரசை முழங்கினர். இவனது படையினர் போருக்கெழுந்த நாள் முதல் போர் முடியும் நாள் வரை தம் போர் உடைகளைக் களைந்ததே இல்லை. (பதி. 2:19:1-10)

நெடுஞ்சேரலாதன் தன் போர்ப் பாசறையில் நீண்டநாள் தங்கினான் (பதி. 2:16.8-9) ஓர் ஆண்டுக்கு மேல் தொடர்ச்சியாகத் தங்கியதும் உண்டு. (பதி. 2.15:1-2) போரில் இவன் பகைவர்களது மதில்களையும் தரவுகளையும் அழித்தான் (பதி. 2.16:4-5) அவர்களது ஊர்களைத் தீக்கிரையாக்கினான் (பதி. 2.15:2). வளமுடன் விளங்கிய பகைவர்களது நாடுகளும் இவனை எதிர்த்தமையால் அழிந்து தம் பொலிவை இழந்து போயின (பதி. 2.13:10-13).

## கொடைத்தன்மை

இவன் சிறந்த வள்ளல் ஆவான். இவன் நாட்டில் பருவமழை பொய்த்தல் இல்லை. அப்பருவ மழையே தவறிவிட்டாலும் பரிசிலர் விரும்பி வந்த பொருள்களை இவன் அளப்பதில் தவறியதில்லை (பதி. 2.18:10-13).

இவனது கைகள் பிறருக்குக் கொடுத்துக் கொடுத்து மிகுந்த வளமை பெற்றிருந்தன (பதி.2.15:36-37) பாடினி (பதி.2.14:17), விறலியர் (பதி.18:6), புலவர், வயிரியர், ஓவியர் சிற்பத் தொழில்களில் வல்ல கண்ணுளர் (பதி.2.20:15-17), முதலான பலருக்கு இவன் கொடை வழங்கினான். பரிசில் பெற வந்தவர் பெறத் தகுதியற்றவராய்

விளங்கினாலும் அவர்களது அத்தன்மையைப் புறத்தார் உணராவண்ணம் மறைத்துவிட்டு நல்கினான் (பதி.2.20:23-24)

மா, களிறு, தேர் ஆகியவற்றைப் பரிசிலாகக் கொடுத்தான் (பதி.2.20:16). பகைவர்களிடம் பெற்ற உயர்ந்த அணிகலன்களைப் பரிசிலாகக் கொடுத்தான் (பதி.2:9-10).

இவன், தன் மீது பத்துப் பாடல்கள் பாடிச் சிறப்பித்த குமட்டூர்க் கண்ணனார் என்னும் அந்தணப் புலவருக்குத் தான் வெற்றி பெற்ற உம்பற்காட்டுப் பகுதியில் ஐந்நூறு ஊர்களைத் பிரமதேயமாகக் கொடுத்தான். மேலும், அவரது வாழ்க்கைச் செலவுக்காகத் தனது எஞ்சிய ஆட்சிக்காலம் முழுவதும் தான் வென்ற தென்னாட்டிலிருந்து வரும் வருவாயில் சரிபாதியும் கொடுத்தான்.

## கடற்போர்

சங்க காலத்தில் அரபிக் கடலில் இருந்த பல சிறு தீவுகள் நெடுஞ்சேரலாதனின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. அங்கு கடம்ப மரத்தைக் காவல் மரமாக உடைய அரசன் ஒருவன் இருந்தான். அவனைக் கடம்பன் என்றே குறிப்பிடலாம். இவனது ஆளுகைக்குட்பட்ட கடம்பர்கள் என்னும் கடற்கொள்ளைக் கூட்டத்தினர் இத்தீவுப் பகுதிகளில் (அரபிக்கடல்) இருந்து கொண்டு அரபு நாட்டிலிருந்தும், மேற்கு ஆசியா நாடுகளிலிருந்தும், வாணிகத்தின் பொருட்டுக் கடல்வழியாக வந்த மரக்கலங்களை சேரநாட்டின் துறைமுகப்பட்டினங்களுக்கு வராதபடி இடைமறித்துக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். இவர்களை நெடுஞ்சேரலாதன் வென்று அவர்களுடைய காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி அதில் முரசு செய்தான் (பதி. 2.12-16, 2:23, 7:1-7)

இந்த கடற்போர் நெடுஞ்சேரலாதன் காலத்தில் நிகழ்ந்தது. இப்போரை முன்நின்று நடத்தி வெற்றி பெற்றவன். அக்காலத்தில் இளைஞனாக இருந்த சேரன் செங்குட்டுவன் ஆவான். நெடுஞ்சேரலாதனுக்காக அவன் மகன் சேரன் செங்குட்டுவன் இந்தப் போரை நடத்திச் சென்றான் எனலாம்.

## முடிவுரை

நெடுஞ்சேரலாதன், சோழன் வேல் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியோடு போரிட்டு மாண்டான். இப்படிப்பட்ட பேராற்றல் வாய்ந்த நெடுஞ்சேரலாதன், பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தில் உயர்வாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.

# வாசகர் வாசகம் 1

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு, வணக்கம்.

அருமையாக வந்து கொண்டிருக்கும் செந்தமிழ் இதழில் அந்தந்தத் திங்கள் படைப்புகள் பற்றி வாசகர்கள் கருதும் கருத்துக்கோர் இடம் ஒதுக்கலாம் என்ற எண்ம் தோன்றுகிறது.

2010 திங்கள் இதழில் பக்கம் 20 விட்டிசை இலக்கணத்தில் பத்தாமை என்ற தலைப்பும் கட்டுரைப் பொருளும் ஒன்றற் கொன்று தொடர்பில்லாமல் விட்டிசைப்பதாக உள்ளன.

தலைப்புக்குரிய விளக்கம் யாது? பத்து ஆமைகளுக்குக் காட்டப்பட்ட பாடல்கள் எந்த நூலைச் சார்ந்தவை?

இவை ஏதோ ஒரு குறிப்பைப் புலப்படுத்துவதாகத் தொடங்கி இறுதியில் புரியாத புதிராக உள்ளது. மற்றும் சிறு கட்டுரையாக விளக்கியிருக்க வாய்ப்புள்ளது போல் உள்ளது.

விட்டிசை இலக்கணம் – என்றதே புரியவில்லை. இது இலக்கணமா? இலக்கியமா?

நான் குறை கூறுவதாக எண்ண வேண்டாம். தெளிவுபடுத்த வேண்டிய கட்டுரை என்பதைக் குறித்தேன். அடுத்த இதழில் அது பற்றிய தெளிவை **முனைவர் க. பரமேஸ்வரன் தெரிவித்தால் நலமே!**

அன்பன்
**தெ. முருகசாமி**, புதுச்சேரி

முனைவர் க. பரமேஸ்வரன் அவர்களின் கவனத்திற்குத் தரப்பட்டுள்ளது.

---

2

மதிப்பிற்சிறந்த பெருந்தகையீர், வணக்கம்.

வாழ்க நலம்.

திசம்பர் 2010 செந்தமிழ் இன்று கிடைத்தது. நன்றி.

வரதட்சணை இல்லா மணவாழ்வு கட்டுரை மேற்கோள்கள், சங்ககாலத் திருமணத்தைக் கண்முன் நிறுத்திக் கருத்தில் நிறைந்தது.

பதிற்றுப்பத்து – கட்டுரை துணைத் தலைப்புகள் மெருகூட்டுகின்றன.

6 கட்டுரை, 1 கவிதை, 6 விண்மீன் மற்றும் நிலவுபோல், இலக்கிய வானை அழகு செய்கின்றன.

திரு. முனைவர் க.சி. எழுதியது போல, சிந்தனை....... பெட்டகமே!

தங்கள் தமிழ்ப் பணிக்குப் பாராட்டுக்கள்.

அன்பு மறவா,
**புலவர் சி. பாண்டுரங்கன்**
ஆம்பூர்

# இலக்கியம் தரும் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகள்

*முனைவர் ரா. விசயராகவன்*
மும்பை

## முன்னுரை

பண்டையத் தமிழன் வரலாற்றை அறிய அதன் இலக்கியமும், கல்வெட்டுகளும், அகழ்வு, சாசனச் சான்றுகளும், நாணயங்களும், துணைபுரிவன. தமிழ், இந்தியாவில் வட மொழியுடனும், பிறநாட்டு மொழிகளுடனும் சம காலத்தால், இன்றும் இளமையுடன் விளங்குகிறது. சிறந்த ஆராய்ச்சிக்கு இலக்கியத்தோடு, அதை உறுதிப்படுத்த பிற சான்றுகள் துணைபோகுமானால் மொழியின் பழமையும், மக்களின் மேன்மையும் நன்கு புலப்படும். இல்லையேல், நவீன ஆய்வாளர்கள் இலக்கியச் சான்றுகளை வெறும் கற்பனை என்று ஒதுக்கிவிடுவர். எனவே புறச்சான்றுகள் உள்ள ஒரு சில இலக்கியக் கூற்றுகளைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இது வரலாற்று ஆராய்ச்சியே தவிர இலக்கிய நயம் காட்டும் கட்டுரை அல்ல.

தமிழும், தமிழரும், தமிழ் நாடும் காலம் தெரியப்படாத புராண காலத்திலிருந்து வளமிக்க வரலாறு கொண்டவை. இதில் முதலாவதாக வால்மீகி இராமாயணத்தையும், வியாசர் மகாபாரதத்தையும் புராண காலம் என எடுத்துக் கொள்ளலாம். அகத்தியர், தொல்காப்பியர் காலம் சரித்திர ஆராய்ச்சிக்கு உட்பட்ட காலம். இக்காலத்தும், இதன் பிற்காலத்தும் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்களாகக் கருதப்பட்ட தமிழின் பொற்காலமாகும். பெருங்காப்பியங்கள் தமிழுக்கு அணி செய்தன. ஆழ்வார்கள், நாயன்மார், ஒட்டக்கூத்தர், கம்பர், இடைக்காலக் கவிஞர்கள். பின், தமிழை முன்னிருத்தி இராமாயண கால முதல் இன்று வரை உள்ள சேது நாடும், தமிழும் இக்காலச் சின்னங்கள். இவற்றில் ஒரு சிறு துளி மட்டுமே இக்கட்டுரையில் காட்டமுடியும். விரிவஞ்சி, கற்கண்டு மலையில் ஒரு சிறு துகள் முழுமலையின் இனிமையைக் காட்டும் என்ற நம்பிக்கையில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

## புராணகாலத் தமிழ்நாடு

காலம் நன்கு தெளியப்படாத கால முதல் பல்துறைகளிலும் சிறந்து விளங்கிய மக்கள் தம் மொழிக்குப் பெயரிடாமல் இருந்தனர் என்பது இயற்கைக்கு மாறானது. எனவே தமிழ் மக்கள் தாம் பேசிய மொழியைத் "தமிழ்" என்ற சொல்லாலே குறிப்பிட்டனர் எனக் கொள்ளலாம். "தமு" என்ற சொல்லை வேராக உடைய "ஸ்வாஹிலி, பாரசீகம், ஸோமாலி, எகிப்து

போன்ற நாடுகள், அதை இனிமை, அறிவு என்ற பொருளில் வழங்குவர். தமிழ் மொழியுடன் ஒத்த மொழியுடைய மக்கள் பண்டில்கண்டு, ஆப்கானிஸ்தான், ஒரியான், ஐரோப்பிய நாடோடிப் பிரதேசத்தில் இன்றும் உள்ளனர்.

வேத காலத்திற்குப் பிற்பட்டு, எழுந்த இருபெரும் இதிகாசங்கள் வால்மீகி இராமாயணமும், வியாசர் மகாபாரதமுமாம். ஆதிநூல்களின் காலம் கிமு 1000க்கும் கிமு 600க்கும் இடைப்பட்டதாகக் கொள்ளலாம். வால்மீகி அவர் இயற்றிய இராமாயணத்தில் தென் நாடுகளான சேர, சோழ, பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகிறார். சுக்கிரீவன் வானர சேனைகளுக்குத் தெற்கிலுள்ள இடங்களைக் குறிப்பிடும் பொழுது அகஸ்திய முனிவரின் பொதிகை மலையையும், தாமிரபரணி கடலில் கலக்கும் இடமான பாண்டியர் தலைநகரும், முத்துக்கள் நிறைந்ததுமான "கபாடபுரத்தை"க் குறிக்கிறார். அங்குண்டாகும் முத்தைப் பற்றி 2300 ஆண்டுகட்கு முந்திய கௌடில்யரும் அர்த்தசாஸ்திரத்தில் "தாமிரபரணி கபாடம் பாண்டியநாடு" என்று வால்மீகியின் கருத்தை உறுதி செய்கிறார். இது கடல் கோளால் அழிந்த பின்பே கொற்கை பாண்டியரின் முத்து விளையும் துறைமுகம் ஆயிற்று. சோழநாட்டில் வால்மீகியால் குறிப்பிட்ட நகரம் "சுவேதாரண்யம் (திருவெண்காடு), சேரநாட்டில் 'முரசிபந்தனம்' (முசிறி) உள்ளது. தாலமியால் (கிரேக்க வரலாற்று ஆசிரியர்) சுள்ளியம் பேர்யாறு ஏடலுடன் கலக்கும் யவனர் மரக்கலங்கள்' பொன்னொடுவந்து கறியொரு பெயரும்' பெருந்துறைமுகமாகும். தமிழ் இலக்கியம் காட்டும் சேது அணை 'குமரி' முதல் 'திருப்புல்லாணி' வரை இருந்ததாகத் தெரிகிறது. (புல்லங்காடர் - சங்கப் புலவர் - நவபாஷாணம் - ஒலி அமர்ந்த கடல் ஊர்) (கடுவன் மள்ளனார் - அகநானூறு 70, 'குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துரைற' - மணிமேகலை) 'ஆசேது - இமாசலம்' தமிழ், (திராவிட' மொழி), வடமொழி இருந்ததாக வால்மீகி குறிப்பிடுவர்.

வால்மீகி ராமாயணத்துக்கு அடுத்தபடியாகக் கருதப்படுவது வியாசருடைய மகாபாரதம். இதில் தமிழ் நாடு சம்பந்தப்பட்ட பகுதியையே நாம் எடுத்துக் கொள்வோம். வியாசபாரதம் ஆதிபர்வத்தில் அருச்சுனன் தீர்த்த யாத்திரையில் பாண்டிய நாடு சென்று அங்கு அப்பொழுது தலைநகராயிருந்த மணலூர் புரத்தரசன் மகள் 'சித்ராங்கதை'யை மணந்து பப்ருவாகனன் என்ற மகனைப் பெற்ற செய்தி காணப்படுகிறது. மணலூர் என்ற ஊர் மதுரை தோன்றுவதற்கு முன்பே பாண்டியர் தலை நகராயிருந்தது. பாண்டி நாட்டில் கிடைத்த 'சின்னமனூர்' தாமிரப்பட்டயத்தில் (கி.பி. 10ம் நூற்றாண்டு) இது குறிப்பிடப்பட்டுள்ளது. மௌரிய அரசர் சந்திரகுப்தனிடம் யவன தூதராய் வந்த 'மெகஸ்தனிஸ்' பெண்டிரால் ஆளப்பட்ட தென்னாட்டு அரசியைப் பற்றிக் குறிப்பிட்டு, அவளுடைய அரசியல் வன்மையைப் பெரிதும் விளக்கியுள்ளார். எனவே புராண வாயிலாக வந்த செய்தி சாசனத்தாலும், வெளிநாட்டாரின் குறிப்பாலும் வலுப்பெறுகிறது. இவ்வரசியின் வமிசத்தினரே பாண்டிய மன்னர்களாகப் பின்னர் ஆண்டு வந்தனர். இதை,

*"பூண்டாழ் மார்பின் பொருப்பிற் கோமான்*
*பாண்டியன் மடமகள்...விசயன் நெஞ்சத்து"* என்னும் பழைய

பாடலைத் தொல்காப்பியம் பொருளதிகாரம் 54 சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் காட்டுவார்.

## சங்கம், சங்கப் புலவர்கள்

மூன்று சங்கங்கள் இருந்ததாக வரலாறுகள் கூறும். சின்னமனூர்ச் செப்பேட்டில் ''மகாபாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்ற தொடர் சங்கம் இருந்ததை வலுப்படுத்தும். ஏழு, எட்டாம் நூற்றாண்டுவரை சங்கம் இருந்து வந்ததாக வைணவப் பெரியார் நம்மாழ்வார் 'அண்டகோளத்து ஆரனுவாகி' என்ற அகவலைச் சங்கத்தாருக்கு அனுப்பிவைத்தார் என்றும் ஏட்டுக் குறிப்பால் அறியலாம். முதல், இடை, கடைச் சங்கங்கள் என மூன்றினுள், அகத்தியர், தொல்காப்பியர் கடைச் சங்கத்துக்கு முன்பு இருந்து தமிழ் வளர்த்தவர். அகத்தியர் தென்னாடு புகுவதற்கு முன்பே தமிழ் இலக்கிய வளம் சிறந்து இருந்தது. பாண்டியனுக்குத் தமிழாசானாகவும், சடங்குகள் நிறைவேற்றுபவராகவும் வேள்விக்குடி, சின்னமனூர் செப்பேடுகள் கூறும் தென்னாட்டுப் பொதியில் குறுமுனியாய் தொல்காப்பியருடன் பன்னிரண்டு மாணாக்கர் இருந்தனர். இவரே புறம் 201இல் குறிப்பிடப்படும் 'வடபால் முனிவனாய்' தம்முடன் வேளிர் குடியினரையும் அழைத்து வந்தவராகலாம். இவருடைய மாணாக்கர்களால் கடல் கடந்து இவருடைய சிலை யவத்தீவு முதலிய கீழை நாடுகளில் வைக்கப் பெற்று, தமிழ் கூறும் நல்லுலகம் விரிவு பெற்றிருந்தது. வேதகால அகத்தியர், இராமாயண கால அகத்தியர் எனப் பல அகத்தியர் இருக்க வாய்ப்புண்டு. இதில் பொதியில் குறுமுனி அகத்தியருக்கு மட்டுமே தமிழில் மிகுந்த பயிற்சி இருந்து இலக்கணம் செய்த பெருமை கிட்டியது. வால்மீகியோ, இராமாயண அகத்தியருக்கு தென்மொழி தெரிந்ததாகத் தெரிவிக்கவில்லை. இவர் பாணினி காலத்தவராய் வடமொழிக்கு இணையாகத் தொடர்புடைய தென் மொழிக்கு இலக்கணம் செய்த சரித்திர புருஷர் ஆவர்.

இலக்கணம் செய்வதற்கு முன்னோடியாய் இருப்பது இலக்கியமாகும். அகத்தியர் தாம் கண்ட தலையாய இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்தார். கடைச் சங்கத்தில் புறநானூறில் 2ஆம் பாடலாகக் கோர்க்கப்பட்ட முரஞ்சியூர் முடிநாகராயர், வால்மீகியார், கௌதமனார், மார்க்கண்டேயனார் ஆகியோர் அகத்தியருடன் சேர்த்து எண்ணப்படுகிறார்.

முரஞ்சியூர் முடிநாகராயர் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முன்னிலைப்படுத்தி அவன் பாரதப் போரில் படைகளுக்கு உணவளித்த வண்மையைப் புகழ்கிறார். முடியில் நாகவடிவு வைப்பது பண்டைய எகிப்து அரசர்களுக்கும், பெரியோர்களுக்கும் உண்டு என்பது சரித்திர வாயிலாக அறிகிறோம். போர் நடக்கும் பொழுது உணவளித்தல் மிகுந்த இடர்ப்பாடு உடையதால் இறந்த வீரர்க்கு பெருஞ்சோறு படைக்கும் சடங்கினை நிகழ்த்தினான் என்று கொள்வதே பகுத்தறிவுக்கு ஒத்ததாகும். இவரோடு பழமை வாய்ந்த முதல், இடைச் சங்கத்து இருந்தவராகக்

கருதப்படுபவர் கௌதமனார், மார்க்கண்டேயனார், வால்மீகியார் ஆவர். இவர்களுடைய ஒரு சில பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. வேறு ஒரு பிரமாணமும் இல்லாததால் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை. இவர்கள் காலத்தில் குமரிக்கோடும், பஃறுளியாறும் இருந்தன என்பதும், இவர்கள் காலத்திற்குப் பின்பு ஒரு பெரிய கடல்கோளால் தென்பாண்டி நாடு அழிவு பெற்றது என்பது இலங்கை, தமிழ்நாடு சரித்திரங்களால் கேட்கப்படுகிறது. இப் பழம் புலவர்கள் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை வற்புறுத்தி தருமபுத்திரனை (அறவோன் மகனே !) முன்னிலைப்படுத்திப் பாடுவதால் பாரத காலத்தவர் என நினைக்க இடமுண்டு. இவர்கள் தொல்காப்பியருக்குச் சிறிது முந்தியவராகலாம்.

தொல்காப்பியர் அக்த்தியர் மாணாக்கருள் ஒருவர். இவர் இயற்றிய 'தொல்காப்பியம்' தமிழ் இலக்கியத்துக்குச் சிறந்த பிரமாண நூலாகக் கொள்ளப்படுகிறது. இவர் காலத்தில் 'ஐந்திரம்' என்ற வட நூல் இலக்கணம் சிறந்து விளங்கியது. இவர் காலத்துச் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் தெரிதல் அரிதாக உள்ளது. ''நிலந்தரு திருவின் பாண்டியன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், ஆர்புனைந்த சோழனும், ஒரு சில வேளிரும் இவர் காலத்து வேந்தர்களென ஊகிக்கலாம்.

**கடல்கோள்**

தமிழ்நாட்டின் தென் பகுதி ஒரு பெரிய கடல்கோளால் அழிக்கப்பட்டது. இது பழம் பெரு தமிழ் நூல்களில் காணப்படுகிறது. குமரிக்கோடும், பஃறுளியாறும், பாண்டி நாட்டுத் தெற்குக் கோடி நிலப்பரப்பும் இக்கடல் கோளால் கொள்ளப்பட்டது. முதல், இடைச் சங்கம் அமைத்த வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாகப் பாண்டிய மன்னரும், சங்க மருவிய புலவர்களும் கபாடபுரத்தைக் கடல்கொள்ள உள் நாட்டு மதுரை வந்தடைந்தனர். இக்கடல் கோள் நிகழ்ந்தது தொல்காப்பியம் அரங்கேறிய காலமாதலால், அதற்குப் பாயிரம் பாடிய அவர் காலத்தவரான 'பனம் பாரனார்'

> *'ஆர்கலி மிதித்த நீர் திகழ் சிலம்பிற்*
> *கூரசைந் தனையாய் நடுங்கல் கண்டே'* (குறுந். 52)

கடல் எழுச்சியாய் நீர் நிலை நிலநடுக்கத்தால் மலைகள் அசைந்து நடுங்கின எனத் தாம் நேரிற் கண்ட பெருங்கடல்கோள் நிகழ்ச்சியை உவமை முகமாகக் கூறினார். இதைப் பௌத்த சரிதம் இராஜாவளி என்றும் இலங்கை நூலில் கிமு 200 ஆண்டை ஒட்டித் தமிழ் நாட்டு அரசன் ஏலேலன் ஆட்சியில் கல்யாணியில் அரசு புரிந்த 'திஸ்ஸா' என்பவன் காலத்து நிகழ்ந்ததாகக் குறிப்பிடும். இதுவே பாண்டிய நாட்டில் நிகழ்ந்த பெரிய கடல் கோளாகும். 'மணிமேகலை' காலத்தில் காவிரிப் பூம்பட்டிணம் கடலால் முழுவதும் அழிக்கப்பட்ட செய்தி (கி.பி. 2-3ம் நூற்றாண்டு)

*"விரிதிரை வந்து வியன் நகர் விழுங்க ஒரு தனி போயினன்
உலகமன்னவன்......அருந்தவன் தன்னுடன் ஆயிழை தாயரும்
வருந்தாது ஏகி வஞ்சியுட்புக்கனர்"*

மணிமேகலை வஞ்சி மாநகர் (உள் நாட்டுக் கொங்குக் கருவூர்) புக்க விவரம் கூறுகிறது. இதையும், முன் பாண்டி நாட்டுக் கடல் கோளையும் குறிப்பிடும் மேல் நாட்டு, தமிழ்நாட்டுக் குறிப்புகள் பல உள்ளன. முதல் கடல்கோள் பாண்டிய நாட்டிலும், இரண்டாவது சோழ நாட்டிலும் நிகழ்ந்தன. நிலநடுக்கம், கடல் கொந்தளிப்புடன் இருந்ததைப் பனம்பாரனார் பாயிரத்தால் அறிகிறோம். இதுவே சில ஆண்டுகளுக்கு முன் நம்நாடு, இலங்கை, இந்தோனேசியாவைப் பாதித்தது.

## வஞ்சி மாநகர்

சங்க இலக்கியங்களில் வஞ்சி மாநகர் என்றும், உலக வழக்கில் கருவூர் என்றும் சேரர் தலைநகர் குறிப்பிடப்படுகிறது. பாண்டியர் தலைநகர் மதுரை என்றும், சோழர் தலைநகர் உறையூர் என்றும் இடத்தைப் பற்றிக் குழப்பமில்லாத போது சேரர் தலைநகர் கொங்கு நாட்டு ஆநிலைக் கருவூர் அல்லது மேல் கடற்கண்ணுள்ள திருஅஞ்சைக்களம் என்ற சர்ச்சை சென்ற நூற்றாண்டில் அறிஞர்களிடையே நிகழ்ந்தது. பெரும்புலவர் ரா. இராகவய்யங்காரும், பண்டிதர் மு.இராகவய்யங்காரும் கொங்கு நாட்டுக் கருவூரை ஆதரிக்க, பிற அறிஞர் பிற்காலத்து சேரர் உறைவிடமான அஞ்சைக் களத்தை ஆதரித்தனர்.

பாண்டியனை 'வைகைத்துறைவன்', சோழனைப் 'பொன்னித் துறைவன்', சேரனைப் 'பொருநைத்துறைவன்' என சங்க இலக்கியங்கள் கூறும். சேரர் கொங்குவை காவூர் நன்னாடதில் ஆவினன் குடி எனப் பிற்காலத்து அருணகிரியார் பாடுவார். சங்க நூல்கள் கருவூரை,

*'கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருபாவியன் நகர்க் கருவூர்'* (அகம் 93)

வஞ்சிப்புற மதில் அலைக்கும்......ஆன் பொருநை (புறம். 347)
*காவிரி அன்றியும்......... மூன்றுடன் கூடிய கூடல் அனையை* (பதிற் 50)

வஞ்சி, ஆன்பொருநை நதிக் கரையில் உள்ளது. காவிரி, ஆன்பொருநை குடவன் ஆறு சேர்ந்த கூடல் என்று தெரிவிக்கும்.

"கொங்கச் செல்வி" என்று இளங்கோவடிகள் கண்ணகியைத் தம் ஊரில் கோயில் கொள்ளும் சிறப்பால் முதலில் வைத்துக் கூறுவார். கருவூரில் உள்ள பசுபதி கோவிலும், 'ஆடக மாடம்' அரங்கநாதர் கோயிலும் பிரசித்தமானவை. 'ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன் (சிலப்பதிகாரம்) என்று வித்துவக் கோட்டு அரங்கநாதரைப் பாடுவார். 'வித்துவக்கோடு' இன்றும் கருவூரில் உள்ளது (அறிஞர் கூட்டம்). கோயில் பிரகாரத்தில் 'கருவூர்

வஞ்சி மாநகர் வைஷ்ணவரோம்' என்ற சிலை யெழுத்து உள்ளது. செங்குட்டுவன் வடநாடு செல்லுமுன் மாலை பசுபதி கோயிலிலும் காலை வைணவக் கோயில் சேடக்குடும்பியிடனும் பிரசாதம் பெற்றான். கருவூர் அருகில் வஞ்சியம்மன் கோயிலும், தும்பிவாயு (யானைக் கூட்டம்) மாநிலை (குதிரைகள் கூட்டம்) குண்வாசல், சேரன் கோடு, சேரன்பாடி உள்ளன.

இவை தவிர கருவூர் பெயர் தாங்கிய சங்கப் புலவர்கள் அநேகர் கிரேக்க அரசர், ரோமானிய அரசர், அகஸ்டஸ், டைபேரியஸ், கிளாடியஸ், கிபி முதல் நூற்றாண்டு கால நாணயங்கள் அமராவதி ஆற்றுப் படுகையில் மிக அதிகமாகக் கிடைத்துள்ளன. 'தாலமி' கருவூரை உள் நாட்டு ஊராகவும், தலைநகராகவும் கூறியுள்ளார். (வஞ்சிமாநகர், ரா. இராகவய்யங்கார் 1917)

கருவூரை அடுத்த புகலூர்க்குன்றில் கிடைத்த தமிழ்ப் பிராமி சாசனமே கருவூரை வஞ்சிமாநகர் என்று துணியவும் செல்வச் சிறப்புப் பெற்ற நகரமென்று அறியவும், பதிற்றுப் பத்தில் கூறப்பட்ட சேரர்களின் வமிசத்தை அறியவும், சங்க இலக்கியம் கூறும் யாவும் உண்மையே; அரசர்கள் பெயர் கற்பனையல்ல என்றும் காட்டியது. இது இருகால கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

## 1927இல் கண்டதொடர்

கருவூர்ப் பொன்வாணிகன், கோசிபன் ஆதன் 1965இல் திருஐராவதம் மகாதேவன் கண்டு உலகுக்கு அறிவித்தது.

*"அமணன் யாற்றூர் செங்காயபன் உறை*
*கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்*
*பெருங்கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ*
*இளங்கோ ஆக அனுப்பித்த கல்"* எனக் கல்வெட்டில் உள்ளது.

இது மிகவும் சரித்திர முக்கியத்தும் வாய்ந்தது. இக்கட்டுரையின் ஆணிவேராய் இதைக் கருதலாம். இது கிபி முதல், இரண்டு நூற்றாண்டு கால கட்ட எழுத்து. 'செல்லிரும் பொறை' 13ஆம் புறப்பாட்டில் கூறப்பட்டனவாகலாம். 'கடுங்கோ' சிக்கராப்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழி ஆதனாகலாம். ஆன்பொருநை இன்றும் அமராவதி என்ற பெயரில் பல சேர நாணயங்களை அளிக்கிறது. சங்க காலத்திற்குப் பின் கொங்கு நாடு சோழ நாட்டின் ஒரு பகுதியானது. கோசர்கள், வேளிர்கள் கொங்கு நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். சேரர் கடற்கரை ஒட்டிய மலைநாட்டை ஆண்டனர். 'நெடுவேள்குன்றம்' பழநி மலைத் தொடராக இருக்கலாம்.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

54, தமிழ்ச் சங்கச் சாலை

மதுரை - 625 001

தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.பில்.

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1

தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 | January 2011 | MA/130/2011

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

### 2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

| | | |
|---|---|---|
| **இரா. அழகுமலை** | **முனைவர் சு. விஜயன்** | **இரா. குருசாமி** |
| செயலாளர் | முதல்வர் (பொறுப்பு) | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

திருமிகு.இரா.குருசாமி,பி.ஏ., அவர்கள்,
தென்றல் இல்லம்,
63 A, சுப்பையாத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.